# சூரிய தாகம்




ராஜேஷ்குமார்

திகில் நாவல் - 1

# 1

அண்ணாசாலை துடைத்து வைத்த மாதிரி இருந்தது. நேரம் ராத்திரி பதினொன்று ஐம்பத்தைந்து. நிலா ஆகாயத்தில் தலை காட்ட மறுத்திருக்க கறுப்புப் போர்வையில் பொத்தல்களாக நட்சத்திரக் கூட்டங்கள் மட்டும் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன.

ரோட்டின் ஒரு முனையில் திரும்பியது அந்தச் சிறிய தள்ளுவண்டி. தள்ளு வண்டியின்மேல் ஒரு நீளமான ஏணி படுத்திருக்க ஒரு கட்டுச் செய்தித் தாள்கள் உட்கார்ந்திருந்தன. கீழே ஒரு பசைப் பக்கெட் தொங்கிக் கொண்டிருந்தது.

தள்ளுவண்டியை ஒரு சிறுவன் தள்ளிக் கொண்டு வர வண்டிக்கு முன்னே நாலைந்து பெண்கள் நடந்து கொண்டிருந்தார்கள். இருபதிலிருந்து இருபத்திமூன்று வயதுக்கு உட்பட்ட பெண்கள்.

மிடியிலும், ஜீன்ஸிலும், சால்வார் கமீஸிலுமாக அந்த ராத்திரி நேரத்தில் ஒரு விப்ஜியார் நகர்ந்து போவது மாதிரி அவர்கள் தெரிய முன்னால் சென்று கொண்டிருந்தவள் -

சூர்யா.

க்ரே நிற ஜீன்ஸும், கட்டம் போட்ட காட்டன் சர்ட்டும் தரித்திருந்த சூர்யாவின் அகலமான கண்களில் தீர்க்கம் இருந்தது. காற்றில் அலைகிற கேசங்கள் சோடியம் வேப்பர் விளக்குகளின் மஞ்சள் வெளிச்சத்



தில் ஸ்பெஷல் எஃபெக்ட்டோடு மின்னின. பி.எஸ்.ஸி. பிசிக்ஸ் கோல்டு மெடலிஸ்ட், ஷார்ட் ஹாண்டில் நிபுணி. தனியார் கம்பெனி ஒன்றில் ஸ்டெனோ கம் டைப்பிஸ்ட் என்கிற அறிமுகங்களுக்கு பின்னால் இந்த சூர்யாவின் ஸ்பெஷாலிட்டிகளை இன்னும் இரண்டு மூன்று அத்தியாயங்களுக்குள்ளாக நீங்களே புரிந்து கொள்வீர்கள் என்பதால் இப்போது அடுத்த பேராவுக்குப் போகலாம்.

தள்ளுவண்டிச் சிறுவன் தலைமுடியை ஒதுக்கி விட்டுக் கொள்கிற சூர்யாவைப் பார்த்துக் கேட்டான்.

"இன்னும் எவ்வளவு தூரம்க்கா...?"

மிடிப்பெண் அவன் தலையைச் செல்லமாய்த் தட்டினாள்.

"இதுக்குத்தான் அரை டிராயர் பொடியனெல்லாம் வேண்டாம்னு அப்பவே சொன்னேன். ஏண்டா கால் வலிக்குதா?"

"இல்லேக்கா.. சும்மாதான் கேட்டேன்."

"இன்னும் கொஞ்ச தூரம் போகணும்.. உனக்கு கஷ்டமாயிருந்தா வண்டியை நிறுத்திக்கோ.."

"இல்லேக்கா. . போயிடலாம்.."

பத்து நிமிஷப் பயணத்துக்குப் பின் வண்டி -

மவுண்ட் ரோட்டின் மையப்பகுதிக்கு வந்திருந்தது.

"இங்கேதான்.. வண்டியை நிறுத்திக்கோ"

சிறுவன் வண்டியை நிறுத்திவிட்டு நடை

பாதையில் போய் உட்கார்ந்தான்.

"ரமா.. ஏணியை எடுத்துப் போடு.. சாந்தி நீயும் பிடி.." என்றாள் சூர்யா.

வண்டியிலிருந்த ஏணி சாந்தி ரமாவின் கைகளில் தவழ்ந்தது. ரோட்டின் ஓரத்தில் ஓரமாக நிமிர்ந்திருந்த அந்த சினிமா பேனரின் மேல் சார்த்தி வைக்கப்பட்டது.

பேனரின் கீழே மலையாள எழுத்துக்கள் ஜிலேபி ஜிலேபியாய் சிதறியிருக்க ஒரு நடிகை மண்டியிட்டு அமர்ந்து அவிழ்ந்த தலைமுடியை தீவிரமாய் முடிந்து கொண்டிருந்தாள். புடவை என்ற பெயரில் அவள் சுற்றியிருந்த வஸ்திரம் ஒழுங்காக தன் கடமையைச் செய்ய மறுத்திருந்தது.

"பூனைக்கு யார் மணி கட்டறது..? பேனர் இவ்வளவு உயரமாக இருக்கே..?" என்றாள் ரமா.

"ஏய்.. நீ ஏறடி.. சாந்தி."

"எனக்குப் பத்துப் படி ஏறினாலே தலை சுத்தும்.."

"டேய்.. தம்பி.. ஏணி மேல நீ ஏர்றியா..?"

"வேண்டாம்க்கா.. இது பெரிய கட்டவுட்."

சூர்யா முன்னால் வந்தாள்.

"ரமா தள்ளிக்க. டேய்.. நீ அந்தப் பசை பக்கெட்டை எடு சாந்தி.. நியூஸ் பேப்பர் கட்டை எடுத்துக் கொடு.."

பசைப் பக்கெட்டை ஒரு கையில் மாட்டிக் கொண்டு பேப்பர் கட்டை அதே கையில் ஏந்திக் கொண்டாள். இன்னொரு கையால்



ஏணியைப் பற்றிக் கொண்டு லாவகமாக ஏணிப்படிகளில் உயர ஆரம்பித்தாள் சூர்யா.

"சூர்யா... பார்த்து..." என்றாள் சாந்தி.

"ரமா.. ஏணி ஆடுது பார்.. நல்லாப் பிடி.."

சொற்ப தொலைவில் தெருவிளக்கின் கீழ் இருந்த பிளாட்பாரக் கடையில் இடியாப்பம் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு சிலரின் கவனம் இங்கே திரும்பியது.

சூர்யா பேனரின் கீழ்ப்பகுதியை அடைந்து அந்த மலையாள எழுத்துக்களின மேல் பசை தடவ ஆரம்பித்தாள். அதன் மேல் நியூஸ் பேப்பரை ஒட்டினாள். இன்னும் சில படிகள் உயர்ந்து அந்த கவர்ச்சி நடிகையின் முழங்காலுக்கு செய்தித்தாளை ஆடையாக்கினாள்.

நடிகையின் வயிறு, மார்பு என்று உயர்ந்து கொண்டே போன சூர்யா உச்சி வரை போய் நியூஸ் பேப்பரால் அந்த அசிங்கமான கட் அவுட்டை மறைத்தாள்.

கீழே நின்றிருந்த பெண்கள் கைகளைத் தட்டினார்கள். சூர்யாவுக்குள் ஒரு அட்வென்ச்சர் சந்தோஷம் மொட்டவிழ கீழே நின்றிருக்கும் சிநேகிதிகளைப் பார்த்து கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தாள்.

அண்ணாந்து பார்த்தபடி நின்றிருந்த அவர்களும் சந்தோஷத்தில் உற்சாகமாகக் கத்தினார்கள்.

"ஆபாசத்தை ஒழிப்போம்.."

சூர்யா மிச்சமிருந்த நியூஸ் பேப்பர் கட்டைக் கீழே போட்டாள். அது விர்ரென்று

கீழே பயணப்பட்டு சாந்தியின் கையிரண்டிலும் பொத்தென அடைக்கலமானது.

"இதையும் போட்டுரட்டுமா..?"

பசைப் பக்கெட்டைக் காட்டினாள் சூர்யா.

"வேண்டாம். பக்கெட் உடைஞ்சிடும். பக்கெட்டோடயே இறங்கி வா சூர்யா."

சூர்யா தலையாட்டிக் கொண்டே கீழே உள்ள படியில் கால் வைத்த அதே விநாடி -

தொளதொள காட்டன் சர்ட் ஏணி உச்சியில் மாட்டிக் கொண்டு சூர்யாவை ஒருபுறமாய் இழுக்க..

கீழே உள்ள படியில் காலை வைப்பதற்குப் பதிலாக சற்றுத்தள்ளிக் காலை அந்தரத்தில் வைத்தாள். அடுத்த விநாடி -

பாலன்ஸ் தவறினாள்.

பசை பக்கெட் ஒரு பக்கமாகத் தெறித்து விழ -

சூர்யா தரையை நோக்கி செங்குத்தாய் விழ ஆரம்பித்தாள்.

கீழே உள்ள பெண்கள் அலறவே சூர்யா அதிவேகமாக தரையில் சத்தென விழுந்தாள்.

சில ரத்தத் துளிகள் சிலீரென்று அவர்கள் மேல் தெறித்தன.

## 2

ஜீ.ஹெச்.

பனிரெண்டு மணி நேரத்துக்கும் மேல் ஐ.ஸி. வார்டில் வைத்திருந்துவிட்டு அந்த நிமிஷம்தான் ஸ்பெஷல் வார்டுக்கு



சூர்யாவை மாற்றியிருந்தார்கள். தந்தி கிடைத்து அவளுடைய அப்பாவும், அம்மாவும் தங்கையும் அரைமணி நேரத்துக்கு முன்னால் வந்து சேர்ந்திருந்தார்கள்.

"மிஸ்டர் வேதாசலம்..."

டாக்டர் கூப்பிட சூர்யாவின் அப்பா திரும்பினார்.

"உங்க டாட்டர் சூர்யா அபாய கட்டத்தைத் தாண்டியாச்சு.. இனி பயப்பட வேண்டியதில்லை. அவளோட ப்ரெண்ட்ஸ் சரியான நேரத்துல இங்கே சேர்த்ததுல உயிரைக் காப்பாத்த முடிஞ்சது. ஒரு வாரம் பெட் ரெஸ்ட் எடுத்தா சரியாயிடும்." என்று சொல்லிவிட்டு டாக்டர் நகர்ந்தார்.

சூர்யாவின் தங்கை வாஹினி வராந்தாவில் நின்றிருந்த சூர்யாவின் தோழிகளிடம் விபத்து எப்படி நடந்ததென்று விசாரித்துக் கொண்டிருந்தாள். ஊதா நிற பாலியெஸ்டரை சுற்றியிருந்தாள். கோயம்புத்தூரில் டிப்ளமோ இன் எலக்ட்ரானிக்ஸ் இரண்டாம் வருடம் படிக்கிறாள். சூர்யா அம்மா ஜாடை என்றால் இவள் அப்படியே வேதாசலத்தின் ஜாடை. சூர்யாவை விட ஒரு அங்குலம் உயரமாயிருந்தாள்.

"மை குட்னஸ்.. அப்புறம்..?"

"சர்ட் தடுக்கியிருக்கலைன்னா இவ்வளவு நடந்திருக்காது.."

"ஆனாலும் அக்காவுக்கு தைரியம் ஜாஸ்தி. என்னைக் கேட்டா அவ ஆபிஸ் டைப் அடிக்கறதோட நிறுத்திக்கிட்டா இந்த

மாதிரி அநாவசியப் பிரச்னைகள் எதுவும் வராதுன்னு நினைக்கறேன்.."

"என்ன நீ.. இவ்வளவு அலட்சியமாச் சொல்றே. சூர்யா எவ்வளவு பெரிய இலட்சியத்தோட இருக்கா தெரியுமா?"

"பெரிய இலட்சியம்.. நீங்களே நினைச்சு பாருங்க. இப்ப அம்மா அப்பா மனசு எத்தனை சங்கடப்படும். அவங்களை நிம்மதி கெடாம வைக்கறதைவிட வேறென்ன பெரிய இலட்சியம் வேண்டிக் கிடக்குது.. நீங்க ஒரு பத்துப் பேர் தொண்டை கிழியக் கத்துறதுனால இந்த நாடு திருந்திடணும்னு நினைக்கறீங்களா? அவ்வளவு ஜனங்க நடமாடுற மவுண்ட் ரோட்ல அவ்வளவு பெரிய பேனர்ல திறந்த மேனியா நிக்கறமேன்னு சம்பந்தப்பட்ட நடிகையே கவலைப்படாதப்ப உங்களுக்கெல்லாம் ஏன் இவ்வளவு அக்கறை? இவ்வளவு கஷ்டப் பட்டு அவ மானத்தை மறைக்கணுமா?"

"வாஹினி. நீ இன்னும் சின்னப் பொண்ணு தான். உனக்கு இன்னமும் மெச்சூரிட்டி வரலை. நாங்க சொல்றதெல்லாம் உனக்கு புரியாது. அந்த பேனர்ல அந்த நடிகையோட மானம் மட்டுமில்ல. பெண் குலத்தோட மானமே ஒட்டு மொத்தமாப் போகுது.."

"அக்கா எந்த ஆபத்துமில்லாம பிழைச் சிட்டதால இன்னமும் உங்க இலட்சியத்தை பத்திப் பேசிட்டிருக்கீங்க. நான் உங்களை விட சின்னப் பொண்ணுதான். ஆனா ப்ராக்டிகல் வாழ்க்கைக்கு என்ன தேவையோ உங்களை விட எனக்கு நல்லாவே தெரியும்.



அரைகுறை டிரஸ்ஸோட ஒருத்தி நின்னா அது மானம் போற விஷயம்னு நான் என்னைக்குமே சொல்ல மாட்டேன். எத்தனை போஸ்டர்ல சாட் பேண்ட் போடாத ஆம்பளைங்களை வெறும் ஜட்டியோட பார்த்திருக்கேன். அது யார் கண்ணையும் உறுத்தாதப்பா இது மட்டும் என் உறுத்தணும்..?"

சாந்தி கையெடுத்துக் கும்பிட்டாள்.

"அம்மா வாஹினி. உன்கிட்டப் பேசி ஜெயிக்க எங்க யாருக்கும் திறமை கிடையாது. எங்ககிட்ட இவ்வளவு பேசறியே.. இதையெல்லாம் சூர்யா கிட்டப் பேசிப்பாரேன். உன்னை நிச்சயம் கிழிகிழின்னு கிழிச்சு எடுத்துடுவா.."

"அக்கா.. ஒரு விதண்டாவாதக்காரி.. அவகிட்டே என்னால் பேச முடியாது.."

வாஹினி சொன்ன அதே விநாடி -

அவர்களை நெருங்கி வந்து கொண்டிருந்தான் ஒரு இளைஞன்.

கண்ணாடி அணிந்திருந்தான். பவர் கிளாஸா அல்லது ஸ்டைலுக்காக அணியப் பட்ட க்ளாஸா என்று சொல்ல முடியவில்லை. உறுத்தாத வர்ணத்தில் ஜியாஜி தைத்துப் போட்டிருந்தான். கால்களில் பொருத்தமான மாடலில் வாக்கர் தேர்ந்தெடுத்து அணிந்திருந்தான். கோனிகா என்று எழுதப்பட்ட க்யூபிகல் நைலான் பேக் அவன் தோளில் தூக்குப் போட்டிருந்தது.

கதவுகளின் நெற்றியிலிருந்த எண்களைச்

சரி பார்த்தபடியே வந்தான.

அவர்களைப் பார்த்ததும் நின்றான்.

"எக்ஸ்க்யூஸ் மீ..."

ரமா "எஸ்.." என்றாள்.

"ஆபாச போஸ்டரை அழிக்கறதுக்காக பேனர் மேலே ஏறி கீழே விழுந்த பொண்ணு.. இந்த ரூம்தானே..?"

"ஆமா.."

"நீங்க அவங்க ப்ரெண்ட்ஸ்ஸா...?"

வாஹினி குறுக்கிட்டாள். "நான் சூர்யாவோட சிஸ்டர். உங்களுக்கு என்ன வேணும்..?"

"ஐம் யாதவ்.. நிறம் பத்திரிகையில ரிப்போர்ட்டரா இருக்கேன்."

யாதவ் தொடர்ந்தான்.

"உங்க சிஸ்டரை பேட்டி எடுக்க விரும்பறேன்.."

"ஸாரி.. இப்ப நீங்க அக்காவைப் பார்க்க முடியாது.."

"ஏன்..?"

"அவளுக்கு ரெஸ்ட் தேவை. ஐ.ஸி. வார்டிலிருந்து இங்கே மாத்தி முழுசா ஒருமணி நேரம்கூட ஆகலை. நாங்களே டிஸ்டர்ப் பண்ணக் கூடாதுன்னுதான் வராந்தாவில் நிக்கறோம்.."

"இப்ப நான் டாக்டரை மீட் பண்ணிட்டேன். நௌ ஷி ஈஸ் ஆலரைட். அந்தப் பொண்ணு இஷ்டப்பட்டா பேட்டி எடுக்க எனக்கு எந்த ஆட்சேபனை



இல்லைன்னு டாக்டர் சொன்னார்."

அவள் லேசான எரிச்சலோடு அவனைப் பார்த்தாள்.

"எனக்கு ஆட்சேபனை இருக்கு மிஸ்டர்..."

"என்னால அவங்களுக்கு இடைஞ்சல் எதுவும் இருக்காது. பொறுக்கியெடுத்த மாதிரி சில கேள்விகள் மட்டும் கேட்டுட்டு நான் போய்ட்டே இருப்பேன். ஒருவரி ரெண்டு வரில அவங்க கருத்தைச் சொன்னால் போதும்.."

"அவளுக்கு அப்படிப் பதில் சொல்லத் தெரியாது. நீங்க ஒரே ஒரு கேள்வி கேட்டாலே போதும். குட்டிப் பிரசங்கமே நடத்திடுவா.. ப்ளீஸ்.. அக்கா ரெஸ்ட் எடுக்கட்டும். ரெண்டு நாள் கழிச்சு வாங்க.."

"ரெண்டு நாளா? மை குட்னஸ்.. உங்களுக்கு எப்படிப் புரிய வைக்கறதுன்னு தெரியலை. இது கொஞ்சம் சுவாரஸ்யமான சமாச்சாரம். விஷயம் கேள்விப்பட்டா ஒரு பத்திரிகை பாக்கியில்லாம இங்கே வந்து விழுவாங்க. என்னை மாதிரி பர்மிஷன் கேட்கக்கூட மட்டாங்க. நேரா உள்ளே பூந்துடற ஆசாமிகள் நிறையப் பேர் இருக்கறாங்க."

வாஹினி "சார்.." என்றாள் தீர்க்கமாய்.

அந்த யாதவ் ஏமாற்றமாய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த விநாடி..

"மிஸ்டர்.."

என்ற குரல் அறைக்குள்ளிருந்து எட்டிப் பார்த்தது.

திரும்பிப் பார்த்தவர்களுக்கு ஜன்னல் வழியே சூர்யாவின் படுக்கை தெரிந்தது.

அவள் தலையிலும் காலிலும் பான்டேஜ் சுற்றப் பட்டிருந்தது. மணிக்கட்டுக்கருகில் ட்ரிப் மூலமாக க்ளுக்கோஸ் ஏறிக் கொண்டிருந்தது.

தலையைச் சற்று ஒருக்களித்து ஜன்னல் வழியே யாதவ்வைப் பார்த்துக் குரலைக் கொடுத்தாள்.

"ப்ளீஸ்.. கம் இன்.."

## 3

"**எ**ன் தாகம் என்றாவது ஒரு நாள் நிச்சயம் தணியும்.. அதுவரைக்கும் இந்த சூர்யா ஓய மாட்டாள்."

ஆசை ஆறுநாள் படத்தின் (இது விநியோகிஸ்தர் கள் வைத்த பெயர். படத்தின் நிஜத் தலைப்பு எஜ்டே கஸேரி) ஆபாச பேனரை அழிப்பதற்காக ஏணி வைத்து நாற்பதடி உயரம் ஏறின இளம் பெண் தவறி விழுந்து அடிபட்டார். இது செய்தி அந்த செய்திக்குப் பின்னே ஒரு சுவாரஸ்யம் கலந்த புரட்சி இழைந்து கொண்டிருப்பது மனதில் உறைக்கவே அவரைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தோம்.

ஜி.ஹெச்சில் சிகிச்சை பெறுவதாக தகவல் கிடைத்து நேரில் சந்திக்க முடிவு செய்து அங்கே சென்றபோது அவரது பெற்றோரும், தங்கையும் சுலபத்தில் நம்மைச் சந்திக்க விடவில்லை. நாமும் விடவில்லை. நம் பிடிவாதத்தைப் பார்த்து



இரக்கப் பட்டோ என்னவோ தலைக் கட்டோடு படுத்திருந்த அந்தப் பெண் சூர்யாவே நம்மை அழைத்துப் பேட்டி கொடுத்தார்.

பெயர் சூர்யா. அடக்கமான முகத்தோற்றம். அங்கங்கே பாண்டேஜ் கட்டுக்களோடு வேதனையுடன் இருந்தாலும் நம் கேள்வி களுக்கு உற்சாகமாகப் பதிலளித்தார்.

"எதனால் அந்த சினிமா பேனரை அழிக்க முயற்சி செய்தீர்கள்..?"

"ஒரு பெண்ணை அந்தப் பேனா்ல இழிவு படுத்தியிருந்தாங்க."

"அந்தப் பெண்ணாகவே இஷ்டப்பட்டுக் கொடுத்த போஸ்தானே! அதை அழிக்க முயல்வதன் மூலம் அந்தப் பெண்ணோட உரிமையில நீங்க தலையிடற மாதிரி ஆகாதா?"

"அப்படிப் போஸ் கொடுக்க அந்தப் பெண்ணுக்கு உரிமை இருக்கலாம். ஆனால் அதை நடுச் சந்தியில மாட்டி வெச்சுக்க யாருக்கும் உரிமை கிடையாது."

"திரைப்படங்களில் ஆபாசத்தை எதிர்ப்பதுதான் உங்க நோக்கமா?"

"பெண்கள் எங்கே இழிவு படுத்தப் பட்டிருந்தாலும் அதை எதிர்த்துக் குரல் தரணும்ங்கறதுதான் என் நோக்கம். திரைப் படங்கள் மட்டுமில்லை. விளம்பரங்கள், நாடகங்கள்னு பல துறைகளில் பெண்களை இழிவு படுத்துறது மலிஞ்சிருக்கும் இந்த நிலைமை மாறணும்னு ஊருக்குப் பத்துப்

பெண்களாவது இந்த அநியாயங்களை எதிர்த்துக் கிளம்பணும்ங்கறது என்னோட கருத்து.."

"உங்க இலட்சியத்துல இதுவரைக்கும் எதையாவது சாதிச்சிருக்கீங்களா..?"

"என்னோட இலட்சியத்தின் கடைசிப் படியைத் தொடற வரைக்கும் நான் எதையும் சாதிக்கலைன்னுதான் சொல்லணும். ஆனால் ஒரு நாள் சாதிக்காம விட மாட்டேன். இந்த நாட்டில் பெண்கள் கேவலப் படுத்தப்படறது நிறுத்தப்பட்டு அவங்களுக்கு உரிய மரியாதை கிடைக்கற வரைக்கும் இந்த சூர்யா ஓய மாட்டாள்."

"இந்த மாதிரி இலட்சியம் உங்க மனசுல வேர் விட்டது எப்படி?"

"சின்ன வயசிலிருந்தே புத்தகங்கள் படிக்கற ஆர்வம் எனக்கு அதிகம். கவிதை களைப் படிக்கறப்போ பெண்களுக்கு இன்னமும் சரியான மரியாதை இந்த சமூகத்துல கொடுக்கப்படலைன்னு மனதில் உறுத்திக்கிட்டே இருந்தது. மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை தன்னைக் கொளுத்துவோம்ங்கற வரியையே என்னோட இலட்சிய வேதமாக்கிட்டேன்.."

"இவ்வளவு பெரிய இலட்சியங்களோட செயல்பட்டு வர்றீங்க.. இது வரைக்கும் உங்களைப் பத்தி வெளியே தெரியாமலேயே இருந்திருக்கே..?"

"என் பேர் வெளியே தெரியணும்ங்கறது என்னோட இலட்சியமில்லை. நான் அந்தக்



கட்டவுட்டுலேருந்து கீழே விழுந்திருக் கலைன்னா இன்னமும் என்னை உங்களுக்கு தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லை."

"உங்களோட நடவடிக்கைக்காக யாரிட மாவது எதிர்ப்பு வந்திருக்கிறதா?"

"ஆரம்பத்தில் நான் என்னோட கருத்துக் களை சில பத்திரிகைகள்ல கட்டுரைகளா எழுதிட்டு வந்தேன். அந்த சமயத்தில் என்னைக் கண்டிச்சு சில மொட்டைக் கடிதங்கள் வந்திருக்கு. எழுத்தால சமூகத்துல மாற்றம் வரலாம். ஆனால் நாம எதிர் பார்க்கற வேகத்துல வராதுன்னு புரிஞ்சிகிட்டேன். ஆக்டிவ்வா ஏதாவது செஞ்சாகணும்னு முடிவு பண்ணி எனக்குத் தெரிஞ்ச பல பெண்கள்கிட்ட. என்னோட கொள்கைகளையும் ஆசைகளையும் பேசிப் பார்த்தேன். ஏமாற்றம்தான் கிடைச்சது. யு.சி. பெண்கள் இழிவு படுத்தப்படறதுக்கு ஐம்பது பெர்சன்ட் பெண்களே காரணமாய் இருக்கறாங்க. தட்டிக் கேட்க யாருக்கும் தைரியமில்லை. எதிர்த்துப் போராட விருப்ப மில்லை"

"ஸோ. உங்க கருத்துக்கு பெண்கள்கூட ஆதரவு தரலையா?"

"நோ.. நோ.. என் கருத்தை நூறு சதம் ஆதரிக்கறாங்க. ஆனால் செயல்பட தைரியமில்லை. எதுக்கு வம்புன்னு பயம். ஆனா கொள்கைகளையே விட்டுத் தர்றாங்களே.. அதைத்தான் என்னால தாங்கிக்க முடியலை.."

"அப்படின்னா நீங்க தனியாதான் போராடறீங்களா? இல்லை.. அசோஷியேஷன் ஏதாவது ஏற்படுத்தியிருக்கீங்களா?"

"அசோஷியேஷன் ஏற்படுத்தணும். அதில் ஒவ்வொரு பெண்ணும் முழு ஈடுபாட்டோட உழைக்கணும்னு ஆசைதான். ஆனா இப்போதைக்கு ஆர்வத்தோடு என் பக்கம் இருக்கறவங்க பொறுக்கி எடுத்த மாதிரி ஆறேழு பேர்தான்."

"இந்த ஆறேழு பேரை வெச்சிட்டு உங்களால சாதிக்க முடியுமா?"

"எண்ணிக்கை முக்கியமில்லை. செயல் தான் முக்கியம். இப்பதானே செயல்பட ஆரம்பிச்சிருக்கோம். எங்க செயல்பாடுகள் தீவிரம் அடையறபோது பலன் நிச்சயம் கிடைக்கும்.."

"உங்க அசோஷியேஷனுக்கு தனி அலுவலகம் உண்டா..?"

"இல்லை. நாங்க ஆறேழு பேர் எங்கே கூடிப் பேசிக்கறமோ அதுதான் எங்க அசோஷியேஷன் அலுவலகம்.."

"நான் எதுக்காகக் கேட்கறேன்னா இந்தப் பேட்டியைப் படிக்கற பெண்கள் சிலர் நீங்க விரும்பற இலட்சியப் பெண்களாகவும் இருக்கலாம். அவங்க உங்களைத் தொடர்பு கொள்ளணும்னா எந்த முகவரியை அணுகணும்..?"

"வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல்லதான் நான் இருக்கேன். ஆபிஸ் நேரம் போக மத்த சமயங்கள்ல என்னைத் தாராளமாய் அங்கே



சந்திக்கலாம். அப்படிப்பட்ட பெண்களைத் தான் வரவேற்கிறேன் நான்."

"ரொம்ப நன்றி மிஸ் சூர்யா. ஒரு நல்ல லட்சியத்தோடு போராடுற உங்களுக்கு வெற்றி கிடைக்க என் வாழ்த்துகள்.."

"நன்றி.."

விடைபெற்றுக் கொண்டபோது சூர்யாவின் பெற்றோர்கள் சொன்ன கருத்து நம்மைக் கொஞ்சம் துணுக்குற வைத்தது.

"உங்க கேள்வியும் அதுக்கு இவ சொன்ன பதிலும் கேட்கறதுக்கு நல்லாதான் இருக்கு.. ஆனா நடைமுறை வாழ்க்கை என்னன்னு இவ இன்னும் புரிஞ்சிக்காததாலதான் இவ்வளவு புரட்சிகரமாகப் பேசிட்டிருக்கா. இன்னும் நாலு மாசத்துக்குள்ள மொத வேலையா இவளுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வெச்சுடப் போறோம். அதுக்கப்புறம் குடும்பம் குட்டின்னு வந்துட்டா தன்னைப் போல இதையெல்லாம் மறந்துடுவாளே.."

நான் சூர்யாவைப் பார்த்தபோது அவளுடைய முகத்தில் புன்னகை. மறக்க மாட்டேன் சாதித்துக் காட்டுவேன் என்கிறதா அந்தப் புன்னகை?

0000

ப்ரொட்யூஸர் ரங்கநாதன் அந்தப் பத்திரிகைப் பேட்டியை முழுசாகப் படித்து முடித்து விட்டு புத்தகத்தை உதவியாளர் விஸ்வநாத்திடமே எறிந்தார். அவன் சொன்னான்.

"பார்த்தீங்களா சார் கொழுப்பை..?

இவளும் இவ இலட்சியமும்.."

ப்ரொட்யூஸர் ரங்கநாதன் அலட்சியமாகச் சிரித்தார். "இந்த மாதிரி பூச்சிகளுக்கெல்லாம் பயந்தா நாம சினிமா எடுக்க முடியுமா தம்பி? இள ரத்தம் ஓடுது. துள்ளலாப் பேசறா. பேட்டி குடுக்கறா. கல்யாணம் ஆனா எல்லாம் சரியாப் போயிரும். நீ நம்ம தொழிலைக் கவனி. அந்த சென்சார் போர்டு ஆபீசரை வீட்ல போய்ப் பார்த்தியா.?"

"பார்த்தேன் சார். ஒரு பிரச்னையுமில்ல. காட்டு வாசிகளை மையமாக வெச்சு எடுத்திருக்கறதால எல்லோர் வாயையும் சுலபமா அடைச்சிடலாம்னார். இன்னும் நாலு சீன் சேர்த்திருக்கலாம்னு எனக்குத் தோணுது சார்.."

ரங்கநாதன் கண்ணாடிக் கோப்பையில் தேன் நிறத்தில் ஸ்காட்ச்சை ஊற்றிக் கொண்டே புன்னகைத்தார்.

"அவர் அப்படிப் பேசலை தம்பி. அவருக்கு வெச்சிருக்கற தட்சணை அப்படி பேச வைக்குது. வைக்க வேண்டியதை வெச்சா எல்லாமே க்ளிக்காவும். அட எச்சில் விழுங்கிட்டுப் பார்க்கறே..? ஊத்திக் குடி.."

அவன் வழிந்து கொண்டே தானும் ஒரு கோப்பையில் ஸ்காட்ச்சை நிரப்பிக் கொண்டு ஒரு மிடறு விழுங்கினான்.

"அப்ப பன்னிரெண்டாம் தேதி படத்தை ரிலீஸ் பண்ணிடலாம்.."

"பண்ணிடலாம் சார். வசூல் பிச்சிக்கும். இவ்வளவு பச்சையா யாரும் இதுவரைக்கும்



காட்டலையே..."

"அட என்ன தம்பி! நீயே பச்சை கிச்சைன்னு பேசிட்டு.. இதெல்லாம் கலைச்சேவைன்னு சொல்லிப் பழகு.. புரிஞ்சதா..?"

அவன் பலமாய்த் தலையாட்டினான்.

ரங்கநாதன் தொடர்ந்தார்.

"காட்டுல பூவுன்னு சென்சாருக்கு டைட்டில் அனுப்பியிருக்கோமே... வெளியே இந்த டைட்டில் போணியாவாது.. போஸ்டர்ல போடுற மாதிரி ஒரு நல்ல டைட்டில் சொல்லு பார்ப்போம்."

விஸ்வம் இன்னொரு கோப்பையைக் காலி செய்து டைட்டிலைச் சொன்னான்.

"காமத்துக்குக் கண்ணில்லை."

"அம்சமான டைட்டில்யா.. போஸ்டர் அடிக்கச் சொல்லிடு.."

## 4

ஆபிஸ் முடிந்து வந்ததும் ஜில்லென்று ஒரு குளியலை எடுத்து முடித்து உடை மாற்றிக் கொண்டிருக்கும்போது கதவைத் தட்டி பக்கத்து அறைக்காரி ரேணுகா, "கெஸ்ட் வந்திருக்காங்க.." என்று கத்திவிட்டுப் போனாள்.

சூர்யா பரபரப்பு எதுவுமில்லாமல் புடவையைச் சுற்றினாள். அந்தப் பத்திரிகை பேட்டி வந்ததிலிருந்தே நிறைய கெஸ்ட் வருகிறார்கள். பெரும்பாலும் பெண்கள். காலேஜ் பெண்கள். சிலர் உணர்ச்சி வசப்

பட்டுப் பாராட்டி உங்க இலட்சியத்துல பங்கு பெற நான் ரெடி. என்று துடிக்கிறார்கள்.

"அசோஷியேஷன்ல சேர அப்ளிகேஷன் ஏதும் நிரப்பணுமா?"

"சப்ஸ்கிரிப்ஷன் கட்டணுமா?" கேள்விகளுக்கு சூர்யா பதில் சொன்னாள்.

"இது வியாபாரமில்லை.."

"ரிக்ரியேஷன் இல்லை."

ஒரு மகத்தான போர் அப்ளிகேஷன் தேவையில்லை. ஆர்வம் போதும். சப்ஸ்கிரிப்ஷன் தேவையில்லை. கோவாபரேஷன் போதும்..

சூர்யாவுக்குள் ஒரு வாரமாக சந்தோஷம் அலை மோதிற்று. தன் எண்ணங்களுக்கும் இலட்சியங்களுக்கும் ஒரு வடிவம் கிடைத்து வருவதாகத் தோன்றியது.

ரிசப்ஷனுக்குப் போக நினைத்து கதவை நோக்கித் திரும்பியவளுக்குப் பார்வையில் அப்போதுதான் அந்த தபால் தவர் மோதியது.

மத்தியானம் தபாலில் வந்திருக்க வேண்டும். ஜன்னல் வழியாகப் போட்டிருக்கிறார்கள். அது ஸ்டூலுக்கடியில் பதுங்கியிருந்தது.

கவரை எடுத்தவள் கையெழுத்தை வைத்தே கடிதம் அப்பாவிடமிருந்து வந்தது என்று தெரிந்து கொண்டாள்.

லேசாய் ஆச்சர்யம் தழைத்தது.

ஆச்சர்யத்துக்குக் காரணம் கவர் கொஞ்சம் கனமாக இருந்தது.



'அப்பா பொதுவாக அரைப் பக்கத்துக்கும் மேல் எழுத மாட்டாரே..' யோசனையுடன் பிரித்தாள்.

உள்ளே வழக்கம்போல அரைப் பக்கம் தான் எழுதியிருந்தார். ஆனால் இரண்டு பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள் வைக்கப் பட்டிருந்தன.

'இரண்டு வரன்களுமே நல்ல இடம். நம் அந்தஸ்த்துக்கு ஏற்றவாகள். இரண்டு பேரும் மெட்ராஸ்தான். உனக்குப் பிடித்தமான வரைத் தேர்ந்தெடுத்து இரண்டு நாட்களுக்குள் கடிதம் எழுது. மேற்கொண்டு காரியங்களைக் கவனிக்க சௌகரியமாக இருக்கும்.'

புன்னகையோடு அந்த போட்டோக்களைப் பார்த்தாள்.

ஒருத்தன் படிய சீவி நெற்றியில் சின்னக் கீற்றாய் விபூதி இட்டு கொஞ்சம் பட்டையான பிரேம் வைத்த கண்ணாடி அணிந்திருந்தான். போட்டோவுக்குப் பின் பக்கம் சுரேஷ் என்றெழுதி ரூ.15000 என்று எழுதியிருந்தான்.

அவளுக்கு சிரிப்பு வந்தது. 'ரேட்டா?'

இன்னொருத்தன் கொஞ்சம் கமலின் பாதிப்புகளோடு இருந்தான். சிரித்துக் கொண்டிருந்தான். பவுடர் கொஞ்சம் தூக்கல் என்று பட்டது. பெயர் முரளி. மாதச் சம்பளம் ரூ.12000.

கெஸ்ட் காத்திருப்பது நினைவுக்கு வர - லெட்டரையும், ஃபோட்டோக்களையும்

மேஜை மேல் வைத்துவிட்டுக் கதவைத் திறந்தாள். வராந்தாவையும், கதவுகளையும் கடந்தாள். சுழன்று கீழே போன படிக்கட்டுகளில் சரிந்து ரிசப்ஷனைத் தொட்டாள்.

யாராவது இரண்டு பெண்கள் இருப்பார்கள் என்றுதான் நினைத்தாள்.

ஆனால் அங்கே யாதவ் இருந்தான்.

"ஹலோ..."

சொல்லிச் சிரித்தான்.

பதில் ஹலோ சொன்ன சூர்யா சேரில் உட்கார்ந்தாள்.

"மறுபடியும் பேட்டியா...?"

அவன் சிரித்தான்.

"நோ. நோ. திஸ் ஈஸ் அன்அஃபிஷியல் விஸிட்.."

"என்ன விஷயம்..?"

"அதுக்கப்புறம் உங்களை ஹாஸ்பிடல்ல வந்து பார்க்க முடியலை.. கொஞ்சம் பிஸியாக இருந்தேன். விசாரிச்சுட்டுப் போகலாம்னு ஒரு கர்ட்டஸி விசிட். இப்ப தேவலையா.. எப்ப டிஸ்சார்ஜ் ஆனீங்க..?"

"டிஸ்சார்ஜ் ஆகி நாலு நாள் ஆச்சு.. ஐ கொய்ட் ஆல்ரைட். உங்களுக்குநான் நன்றி சொல்லணும்.."

"எதுக்காக..?"

"பேட்டி தர்றது ஒரு வகையில சுய விளம்பரம்னு நினைச்சேன். ஆனா அதனால நிறைய பிரயோஜனம் இருக்குன்னு



புரிஞ்சிட்டேன். நிறைய ஆக்டிவ் மெம்பர்ஸ் கிடைக்க ஆரம்பிச்சிட்டாங்க.."

"இதை அப்படியே விட்றாதீங்க. அசோசியேஷனை மொதல்ல பதிவு பண்ணி வெச்சிருங்க.."

"பதிவு பண்ணினாதான் சங்கமா? எதுக்காக இந்த ஃபார்மாலிடியெல்லாம்..?"

"அதுக்காகச் சொல்லலை.. லீகலா ஏதாவது ஆக்ஷன் எடுக்க வேண்டியிருந்தா அசோசியேஷனை வெச்சு எடுக்கலாம். அதுல நிறைய சவுகரியங்கள் இருக்கு.."

"அதுக்குன்னு தனி இடம் வேணுமே..?"

"எப்படி இருந்தாலும் இனிமே நிச்சயம் ஒரு தனி ஆபீஸ் தேவைதான். நியைப் பேர் உங்களைப் பார்க்க வர்றதாகச் சொல்றீங்க.. ஹாஸ்டல்ல இருந்துட்டு அவங்களைச் சந்திச்சுப் பேசறது சிரமம்தானே..? அசோஷியேஷனுக்குன்னு ஒரு ஆபீஸ் இருந்தா கம்யூனிகேஷன் சுலபம்தானே..?"

"அதெல்லாம் காஸ்ட்லி மிஸ்டர் யாதவ். வாடகை தந்து, மெயின்டெய்ன் பண்ண வேண்டாமா? ஆடம்பரம் முக்கியமில்லை. இலட்சியம்தான் முக்கியம்."

"அடையார்ல என் ப்ரண்ட்டோட மார்க்கெட்டிங் காம்ப்ளக்ஸ் இருக்கு. அங்கே ஒரு ஆபிஸ் அறை வாங்கித் தர என்னால் முடியும்.."

"வாடகை..?"

"உங்களால் முடிஞ்சதைத் தாலாம். உங்க பேட்டியைப் படிச்சுப் பார்த்துட்டுப்

பாராட்டினான். இவங்களுக்கெல்லா
சந்தர்ப்பம் கிடைச்சா சந்தோஷம
உதவுவேன்னு சொன்னான்."

சூர்யா அவனை மெல்ல நிமிர்ந்
அவனைப் பார்த்தாள்.

"எனக்காக இவ்வளவு சிரமப்படறீ
களே..? பேனர் ஏறி தார் பூச ஆளில்லா
அசோசியேஷன்கூட நடத்தறாளேன்
பரிதாபமா?"

யாதவ்வின் உதடுகளில் புன்ன
பரவியது.

"அப்படி எதுவும் இல்லை. உங்க நோக்க
எனக்குப் பிடிச்சிருக்கு. நான் எத்தனையே
அரசியல்வாதிகள், நடிகர்கள், தலைவ
களைப் பேட்டி கண்டிருக்கேன். எ
கேள்விகளுக்கு அவங்க பதில்கள் பேட்டி
காகவே தேர்ந்தெடுத்த வார்த்தைகளா
அமைஞ்சிருக்கும். அந்த" பதில்கள்ல ஒ
செயற்கைத்தனம் வீண் ஜம்ப
பொதிஞ்சிருக்கும். உங்ககிட்ட போலி
தனம் இல்லை. நிஜத்தைப் பேசறீங்க
பேசறதைச் செய்யறீங்க.."

சூர்யா தன் இரண்டு கைகளையும் த
தலையில் வைத்துக் கொண்டு சிரித்தாள்.

"என் தலை ஜில்லுன்னு ஆயிடுச
மிஸ்டர் யாதவ்.."

"ஐம் டெல்லிங் ட்ருத் சூர்யா. அப்புறம்
அம்மா அப்பா நல்லாயிருக்காங்களா...?"

"நல்லாயிருக்காங்க.. இன்னிக்குத்தா
லெட்டர் வந்தது. அப்பாதான் பிடிவாதம



இருக்கார். இதை எல்லாம் விட்டுட்டு கல்யாணம் பண்ணிக்கோனு?"

"ஐ..ஸீ.."

"இன்னிக்கு லெட்டரோட ரெண்டு ஃபோட்டோ வையும் வெச்சு அனுப்பியிருக்கார். அதிலிருக்கற ஒருத்தரை நான் செலக்ட் பண்ணி ரெண்டு நாள்ல லெட்டர் போடணுமாம்.."

"அப்படியா..."

"நீங்க என்ன நினைக்கறீங்க மிஸ்டர் யாதவ்..?"

அவன் புன்னகைத்தான்.

"நான் என்ன நினைக்கறது.. இதெல்லாம் உங்க பெர்சனல் விஷயம்.. நீங்கதான் முடிவெடுக்கணும்.."

"இப்ப எனக்கு கல்யாணத்துக்கு அவசரமில்லை. மேரேஜ்னு வந்துட்டா ஒரு அம்பது பர்செண்ட்டாவது என் சுதந்திரம் பறி போயிடும். ஆபிஸ் நேரம் போக மத்த நேரத்தை இப்ப என் லட்சியத்துக்காக செலவழிக்கறேன். வரப் போறவன் விடுவானா?"

"ம்யூச்சுவல் அண்டர்ஸ்டாண்டிங் இருந்தா போதும். உங்களைப் புரிஞ்சிகிட்ட கணவன் கிடைச்சா அது சாத்தியம்தான்.."

"அப்படி ஒருத்தன் கிடைக்கணுமே.. அதெல்லாம் ஐடியல் மிஸ்டர் யாதவ்.."

"அதுக்காக நீங்க மேரேஜ் பண்ணிக்காமலேயே இருந்துடுவீங்களா?"

"அப்படி இல்லை. லட்சியத்தோட முதல் படியில இப்பதான் கால் வைக்கறேன். அட்லீஸ்ட் பாதி தூரமாவது பயணப்பட்ட பிறகுதான் மத்ததெல்லாம்.."

"உங்களுக்குப் பின்னால் ஒரு தங்கை இருக்காங்களே..."

"அவ படிப்பு முடிய இன்னும் ஒரு வருஷம் இருக்கு. எனக்கப்புறம்தான் அவ மேரேஜ் பண்ணிக்கணும்னு ஏதாச்சும் சட்டம் இருக்குதா? உங்களை இங்கேயே உட்கார வெச்சுப் பேசிட்டிருக்கேன். எதிர்ல கான்டீன் இருக்கு.. காபி சாப்பிடறீங்களா...?"

"நோ.. தாங்க்ஸ்.. நான் கிளம்பறேன். அஸ் ஏ ரிப்போர்ட்டரா ஒரு கேள்வி. உங்க அசோசியேஷனோட அடுத்த மூவ் என்ன..?"

"இன்னிக்கு என்ன கிழமை..?"

"வெள்ளி."

"நாளைக்கு ராத்திரி நாங்க தார் பக்கெட்டோட கிளம்பப் போறோம். மெட்ராஸ் பூராவும் ரவுண்ட் வரப் போறோம். ஆர்வமிருந்தா நீங்களும் வரலாம். காமத்துக்குக் கண்ணில்லைன்னு ஒரு கன்றாவியான போஸ்டர். ஊர் பூராவும் அதை ஒட்டியிருக்கான். தார் பூசி அழிக்கணும். திங்கட்கிழமை எல்லோரையும் லீவ் போடச் சொல்லியிருக்கேன். எல்லோருமாச் சேர்ந்து கலெக்டரைப் பார்க்கப் போறோம். படத்தை பேன் பண்ணச் சொல்லி மனு தரப் போறோம்.."



# 5

விஸ்வம் அந்த டெலிபோன் பூத் ஓரமாக ஸ்கூட்டரை நிறுத்தி ஸ்டாண்ட் இட்டான். இடுப்பை தொளதொளப்பாய்ப் பற்றியிருந்த பேன்ட்டை மேலே இழுத்து விட்டுக் கொண்ட படியே பூத்துக்குள் நுழைந்தான்.

லைன் கிடைக்காத ஆத்திரத்தில் யாரோ டெலிபோன் இலாகா ஒழிக என்று பென்சிலில் கிறுக்கி வைத்திருந்தார்கள். அதைப் பார்த்துக் கொண்டே விஸ்வம் ஒவ்வொரு எண்ணாகச் சுழற்றினான். முதலில் எங்கேஜ்டு சத்தம் வந்தது. அடுத்த முறை ரிங் போனது. விநாடிக் கணக்கில் காத்திருந்தான்.

மறுமுனையில் ரிசீவர் எடுக்கப்படும் சத்தம் கேட்டதும் தயாரானான்.

ரங்கநாதனின் குரல் "ஹலோ" என்று வழிந்தது.

"சார்.. நான் விஸ்வம்."

"விஸ்வமா.. என்ன விஷயம்..?"

"சார்.. நம்ம போஸ்டர் ஒண்ணு விடாம தார் பூசி அழிச்சிருக்காங்க.."

"அ..அப்படியா..? யாரு அந்த சிறுக்கியோட வேலையா..?"

"அவ வேலையாத்தான் இருக்கும் சார்.."

"என்ன.. இவ இப்படி நம்மை சீண்டி விட்டுட்டே இருக்கா..."

"அப்புறம் நிறம் பத்திரிகைல மூலைச் செய்தி பார்த்தீங்களா சார். திங்கட்கிழமை

அவளும் அவளைச் சேர்ந்த பொட்டச்சி களும் சேர்ந்து கலெக்டரைப் பார்த்து மனு தரப் போறாங்களாம்.."

"நம்ம படத்தை தடை பண்ணனும்னு கோர்ட்ல வேற கேஸ் போட போறாங்களாம்.."

"நம்மை சும்மா இருக்க விடமாட்ட போலிருக்கே. அவ யாரு என்னன்னு விசாரிச்சுப் பார்த்தியா..?"

"ம். ஹாஸ்டல்ல தங்கியிருக்கா.. அம்மா அப்பா எல்லோரும் கோயம்பத்தூர்ல இருக்காங்க. இவ அண்ணா நகர்ல ஒரு தனியார் கம்பெனில ஸ்டேனோ கம் டைப்பிஸ்ட்டா இருக்கா,."

"அந்தக் கம்பெனி எங்கேயிருக்குன்னு உனக்குத் தெரியுமா?"

"விசாரிச்சு அட்ரஸ் வாங்கி வெச்சிருக்கேன்.."

"ஒண்ணு பண்ணு. நேரா அங்கே போய் அவளைப் பாரு.. நான் பார்க்கணும் பேசணும்னு சொல்லு.."

"சரி சார்.."

எதிர்முனையில் அவர் டொக்கென்று சாத்த விஸ்வமும் ரிஸீவரைக் கொக்கியில் மாட்டினான்.

ஸ்கூட்டரை உதைத்தான்.

ட்ராபிக்கில் நீந்திய ஸ்கூட்டர் இருப நிமிடங்கள் சாலையைத் தேய்த்துவிட்டு அந்த பிரைவேட் கம்பெனியின் வாசலில் தன்



இயக்கத்தைத் தொலைத்தது. டிஸ்டம்பர் அடித்து கட்டடத்தை புத்தம் புதிதாய் வைத்திருந்தார்கள்.

சன் ஷேடுகளில் பூந்தொட்டிகள் தொங்கிக் கொண்டிருந்தன. கண்ணாடி ஜன்னல்களுக்குப் பின்னால் கர்ட்டன்கள் அசைந்து கொண்டிருந்தன.

ரிசப்ஷன் கொஞ்சம் சிறியதாய் இருந்தாலும் அழகாக வைத்திருந்தார்கள். அழகுக்கு முக்கியத்துவம் தரப்பட்ட ஓவியங்கள் அறையைச் சுற்றிலும் மாட்டப் பட்டிருந்தன. அந்த ஓவியங்களில் ஒன்றைப் போல ரிசப்ஷனிஸ்ட் வட்ட மேஜைக்குப் பின்னால் உட்கார்ந்திருந்தாள்.

"வாட் கேன் ஐ டூ பார் யூ..?"

அவள் குரல் இனிப்பில் அமிழ்ந்து போன விஸ்வம் சில விநாடி தாமதத்துக்குப் பின்தான் பதிலைச் சொன்னான்.

"மிஸ். சூர்யாவைப் பார்க்கணும்.."

"என்ன விஷயமா..?"

"ஃபெர்சனல்.."

"ஒரு அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணுங்க..."

அவள் இண்டர்காமை அழுத்தத் துவங்க விஸ்வம் அவள் காட்டின பாலிமர் நாற்காலியைத் தொட்டு நிரப்பினான்.

அவளுடைய லாவகமான அசைவுகளை ரசித்துக் கொண்டிருப்பதற்குள் சூர்யா எதிரே வந்து -

"ஐம் சூர்யா.." என்றாள்.

விசுக்கென நிமிர்ந்து "ஹலோ.." என்றான்.

"நீங்க யார்னு தெரியலையே....?"

"என் பேர் விஸ்வம்.."

"என்ன விஷயம்..?"

"விஷயத்துக்கு நேராவே வர்றேன். என்னோட பாஸ் உங்களைச் சந்திக்க விரும்பறார்.."

"உங்க பாஸ்.., யார் உங்க பாஸ்..?"

"மிஸ்டர் ரங்கநாதன். ப்ரொட்யூசர் கம் டிஸ்ட்ரிப்யூட்டர் ரங்கநாதன்.."

"அவர் எதுக்காக என்னைப் பார்க்கணும்..?"

"உங்க அசோஷியேஷன் சம்பந்தமா பேசணும். சாயந்திரம் கார் அனுப்பறேன்னார். நீங்க கார்லயே பங்களாவுக்கு வந்துடலாம்.."

"மலையாள சினிமா பட ப்ரொட்யூஸரா உங்க பாஸ்.."

"எ..எஸ்.."

"அவர் என்னைச் சந்திக்க விரும்பினதுக்காக நான் சந்தோஷப்படறேன். எங்க அசோசியேஷன் ஆபிஸ் அடையார்ல ஓபன் பண்ணியிருக்கோம். அங்க வந்தா அவர் என்னை தாராளமாச் சந்திக்கலாம்.."

"அவர்.. அவர்.. அங்கெல்லாம் வர மாட்டார்ங்க. உங்களைக் கார்லயே கூட்டிட்டுப் போய் கார்லயே கொண்டு வந்துவிட ஏற்பாடு பண்றோம்."



சின்ன எரிச்சல் மனசில் விழ அவனைப் பார்த்தாள்.

"நான் அங்கெல்லாம் வர மாட்டேன். உங்க பாஸைப் பார்க்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. அவருக்கு அவசியம் இருந்தால் அடையாறு ஆபீசுக்கு வரச் சொல்லுங்க. எனக்கு நிறைய வேலை இருக்கு.."

சொல்லிவிட்டு விடுவிடுவெனத் திரும்பி நடந்தாள்.

அவள் முதுகைக் கோபத்துடன் வெறித்தான்.

## 6

அந்த காம்ப்ளக்ஸில் ஒரு முனையில். பெண்கள் முன்னேற்ற இயக்கம் என்ற பெயின்ட் எழுத்துக்களைத் தாங்கின போர்டு ப்ரெஷ்ஷாக ரங்கநாதன் கண்ணிலடித்தது. தரையில் புரளும் வெள்ளை வேஷ்டியைச் சற்று உயர்த்திப் பிடித்தபடியே காரை விட்டு இறங்கினார்.

கூடவே இறங்கின விஸ்வத்தைப் பார்த்துக் கேட்டார்.

"அவ்வளவு திமிராவா பேசினா அவ..?"

"ஆமா சார்.."

"இவ்வளவு தூரம் நான் இறங்கி வந்திருக்கேன். என் பேச்சுக்கு அவ ஒத்து வரலைன்னா அப்புறம் நடக்கறதே வேற.."

"எவ்வளவு பெரிய ஆபீசருங்க எல்லாரும் நீங்க சொல்லி வாயைப் பொத்தி

இருக்கறாங்க. இவளும் அடங்கிடுவா சார்.."

"அடங்கணும்.."

காம்ப்ளக்ஸின் மொசைக் படிகளில் உயர்ந்தார்.

ஆபிஸ் அறையைத் தொட்டபோது -

சூர்யா மேஜைக்கு பின்னால் தெரிந்தாள். கூடவே நாலைந்து பெண்கள் என்னவோ டிஸ்கஷனில் இருந்தார்கள்.

கதவருகே வந்ததும் "உள்ளே வரலாமாம்மா?"

கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் ரங்கநாதன்.

நிமிர்ந்த சூர்யா விஸ்வத்தைப் பார்த்ததும் புரிந்து கொண்டாள்.

"வெல்கம்" என்றாள் புன்னகையுடன்.

மற்ற பெண்கள் எழுந்து கொள்ள காலியான நாற்காலிகளைக் காட்டினாள் சூர்யா.

"உட்காருங்க ப்ளீஸ்.."

"என்னம்மா.. ஆபீஸ் ரூம் புதுசா..?"

கேட்டுக் கொண்டே உட்கார்ந்தார் ரங்கநாதன்.

"ஆமா.. நேத்திக்குத்தான் இனாக்ரேட் பண்ணினோம்.."

ஜன்னல்களிலும், கதவுகளிலும் மாவிலைகள் தொங்கின. ஒரு சக்தி படம் சுவரில் மாட்டப் பட்டிருந்தது.

அதற்கு நேர் எதிர் சுவரில் பாரதியாரின்



ஆப் சைஸ் உருவம் சூர்யாவின் தலைக்கு மேல் ப்ளைவுட் செவ்வகம். 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்று கர்ஜித்தது.

அதைப் படித்து விட்டு மெலிதாய் இதழோரம் புன்னகைத்துக் கொண்டார் ரங்கநாதன்.

"உங்க பி.ஏ. காலைல ஆபீசுக்கு வந்தார். நீங்க என்னை வரச் சொன்னதாச் சொன்னார். என்ன விஷயம்..?"

ரங்கநாதன் பேச்சைத் துவக்கினார்.

"உன்னை பங்களாவுக்கு வரச் சொன்னதுக்குக் கோவிச்சுகிட்டியாமே. காரணமாத்தான் வரச் சொன்னேன். நான் கொஞ்சம் ப்ரைவஸியாகப் பேச விரும்பினேன். இங்கே இத்தனை பேரைச் சுத்தியும் வெச்சிட்டு என்ன விஷயம்னு கேட்டா நான் என்ன சொல்ல முடியும்...?"

அவரின் பட்டவர்த்தனமான பேச்சுக்கு அங்கிருந்த பெண்கள் மூன்று பேருமே முகம் சுளித்தார்கள்.

ஒருத்தி "சூர்யா.." என்றாள்.

சூர்யா திரும்ப.. "நீ பேசிட்டிரு.. நாங்க லாயருக்கு போன் பண்ணிட்டு வர்றோம்."

அவர்கள் வெளியேறினார்கள்.

"நாகரீகம் தெரிஞ்ச பெண்கள்.." என்று சிரித்தார் ரங்கநாதன்.

"சரி விஷயத்தைச் சொல்லுங்க..." என்றாள் சூர்யா.

தொண்டையைச் செருமிக் கொண்ட
ரங்கநாதன் தனது பேச்சைத் தொடர்ந்தார்.

"நீ பண்ற பொதுச்சேவை ரொம்
நல்லாதாம்மா இருக்கு. எல்லோரு
பாராட்டுற மாதிரிதான் இருக்கு.."

"தாங்க்ஸ்.."

"அவசரப்படாதே. அது எங்
பிஸினஸைப் பாதிக்குதே.."

"நீங்க பண்றது பிசினஸ் அல்ல. ஒரு
திருடனைக் கூட மன்னிச்சிடலாம். ஆனா
உங்களை மாதிரியான ஆட்களுக்கு
மன்னிப்பு என்பதே கிடையாது.."

"ஜனங்க பார்க்கறாங்க.. அதனாலதான்
அந்த மாதிரி படங்களைத் தர்றோம்.."

"ஜனங்க மேல பழியைப் போடாதீங்க சார்
நல்லதை நல்ல விதமாகச் சொன்னா
அதையும் பார்க்கத் தயாராதான் இருக்காங்க
வளரவேண்டிய சமுதாயம் தியேட்டருக்கு
உள்ளேயே முடங்கிப் போறாங்க.
அறியாமையில இருக்கற ஜனங்களை
வெளிச்சத்துக்குக் கொண்டு வர்றதுக்குப்
பதிலா கையைக் கட்டிப் போட்டு இருட்டுல
தள்ளி விடறீங்க."

"இங்க பாரும்மா.. உன்னோட
உபதேசத்தைக் கேட்கறதுக்காக நான் இங்கே
வரலை. உனக்குப் புத்திமதி சொல்லிட்டுப்
போகத்தான் வந்தேன். உனக்கு இதெல்லாம்
விளையாட்டாத் தெரியலாம். ஆனா நீ பண்ற
ஒவ்வொரு காரியமும் எங்க அடி மடியில கை
வைக்கற மாதிரி இருக்கு. சங்கம் நடத்து.



ஊர்வலம் போ. போஸ்டர் அடிச்சு ஒட்டு.
அதையெல்லாம் சந்தோஷமா சமாளிப்பேன்.
ஆனா எம் போஸ்டர்ல தார் பூசறது..
கூட்டமாப் போய் கலெக்டர்கிட்ட மனு
தர்றது.. கோர்ட்ல கேஸ் போடறது..
இதெல்லாம் வேணாம். பணம் வேணுமா..
கேட்டு வாங்கிக்க... படத்துக்குப் படம்
கமிஷன் அனுப்பறேன்."

"ஸ்டாப் த ஹெல்.." என்று கத்தினாள்
சூர்யா.

முகம் கோபத்தில் சிவக்க மார்புகள்
ஏறித்தாழ.. உக்கிரமாய் அவரைப் பார்த்தாள்.
உணர்ச்சியை அடக்க நாற்காலிப் பிடியை
அழுத்தமாய் பற்றிருந்தாள்.

"மிரட்டிட்டுப் போகலாம்னு
வந்தீங்களா..? மொதல்ல இந்த சூர்யாவைப்
பத்தி நல்லாப் புரிஞ்சிட்டு அப்புறமா பேச
வாங்க. நான் மிரட்டலுக்கெல்லாம் பயப்
படற ரகமும் இல்லை. பணத்துக்காகப்
பல்லிளிக்கிற ரகமும் இல்லை.."

ரங்கநாதன் விஸ்வத்தைப் பார்த்தார்.

"விஸ்வம். வண்டியிலேருந்து ப்ரீப்கேஸைக்
கொண்டு வா.."

சூர்யா ஆத்திரத்தின் உச்சிக்கு போய்ச்
சேர்ந்தாள்.

"கெட் லாஸ்ட்.. வெளியே போய்யா..."

ரங்கநாதன் முகம் கறுத்துப் போய்
அடிபட்ட பார்வையில் அவளை சில
விநாடிகள் பார்த்து விட்டு எழுந்தார்.

## 7

**வே**தாசலம் லேடீஸ் ஹாஸ்டலின் நுழைவாயிலைத் தொட்டபோது சூர்யாவின் பக்கத்து அறைக்காரி எதிர்ப்பட்டாள்.

"வாங்க சார்.."

"சூர்யா இருக்காளா..?"

"சூர்யா ரூம்ல இல்லையே..."

"ரூம்ல இல்லையா..? இந்த நேரத்துக்கெல்லாம் ஆபீஸ் முடிஞ்சிருமே...?"

"இப்பெல்லம் அவ ரூம் திரும்ப எட்டு எட்டரை மணி ஆயிரும் சார்.."

"எட்டரை மணி ஆயிருமா.. அது வரைக்கும் ஆபீஸ்ல என்ன வேலை..?"

"ஆபீஸ் வேலை எப்போதும் போலத்தான். ஆபிஸ்லேருந்து நேரா அவ இங்கே வரமாட்டா. அவளோட பெண்கள் முன்னேற்ற இயக்கத்துக்குப் போய்ட்டுத் தான் வருவா.."

"அது எங்கே இருக்கு..?"

"அடையார்ல இருக்கு. அசோசியேஷனுக்குன்னு புதுசா ஆபீஸ் தொடங்கிட்டா..."

"என்னம்மா.. இது. இவ இப்படி கொள்கை, இலட்சியம்னு அலைஞ்சிட்டிருக்கா. மாப்பிள்ளை போட்டோ அனுப்பிச்சு பிடிச்சிருக்கான்னு கேட்டேன். அதுக்கு இன்னமும் பதிலையே காணோம். நீயெல்லாம் பார்த்துச் சொல்லக் கூடாதா?"

"நானா.. நல்ல கதை சார். அவகிட்டே பேசி ஜெயிக்க முடியாது. மிஞ்சிப் போனா



நம்மையும் அவ பக்கம் இழுப்பாளே தவிர நாம சொல்றதை அவ கேட்கவே மாட்டா.."

"அந்த அடையாறு அட்ரஸைக் கொடும்மா. இன்னைக்கு அவளைப் பார்த்து ஒரு முடிவைத் தெரிஞ்சிட்டு வரணும்.."

அவள் அந்த முகவரியைத் தெரிவிக்க மனதில் அதை வாங்கிக் கொண்டு அவளிடம் விடை பெற்றார் வேதாசலம்.

சாலையைக் கடந்த ஆட்டோவைக் கை தட்டிக் கூப்பிட்டு அட்ரஸைச் சொல்லி ஏறியமர்ந்தார்..

'என்ன.. இந்தப் பெண் இப்படி இருக்கிறாள்?'

வழியெல்லாம் கவலை மனசை அரித்தது.

கட்டிடங்களும், ப்ளாட்பார ஜனங்களும் பின் வாங்கினார்கள். கிட்டத்தட்ட 15 நிமிஷங்கள் குலுங்கிய ஆட்டோ எந்த சிக்னலிலும் சிக்காமல் நேராக அந்த காம்ப்ளக்ஸில் வந்து நின்றது.

கொஞ்ச தூரத்தில் வந்தபோது அறை வாசலில் கலர் காகிதத் தோரணங்களும் பெண்களும் தெரிந்தார்கள்.

அந்தக் கட்டிடத்தில் சூர்யாவைத் தேடியபடி உள்ளே நுழைந்தார் வேதாசலம்.

"யார் வேணும்..?"

அதற்குள் ரமா அவரைப் பார்த்து விட்டிருக்க..

"வாங்க சார்.." என்று வரவேற்று விட்டு "சூர்யா.. சூர்யா..." என்று கத்தினாள்.

உற்சாகமான சிரிப்புடன் இருந்த சூர்யா திரும்பிப் பார்த்தாள். அப்பா கண்ணில் அடித்ததும் உற்சாகம் இன்னொரு கோட் அப்பிக் கொள்ள ஓடி வந்து கையைப் பிடித்துக் கொண்டாள்.

"என்னப்பா.. இது? சொல்லாமல் கொள்ளாமல் திடீர்னு விஸிட்..?"

அவர் பதில் சொல்வதற்குள் மேஜை மேலிருந்த தட்டிலிருந்து ஒரு காட்பரீஸ் சாக்லெட்டை எடுத்து காகிதத்தைப் பிரித்து அவர் வாயில் பலவந்தமாய்ப் போட்டாள்.

"இந்தாங்க. மொதல்ல ஸ்வீட் சாப்பிடுங்க.. அப்புறமா பேசுங்க.. அம்மா எப்படி இருக்கறாங்க. வாஹினி எப்படி இருக்கா..?"

"அவங்க எல்லோரும் நல்லா இருக்காங்கம்மா.. எதுக்காக ஸ்வீட்டும் இந்த கோலாகலமும்..?"

"இந்த இயக்கத்துக்கு சின்ன வெற்றி கிடைச்சிருக்கு. அதைக் கொண்டாடறதுக்கு தான்."

"வெற்றியா...? என்ன வெற்றி..?"

"ஒரு ஆபாசப் படத்தை எதிர்த்து கலெக்டர் கிட்டே மனு கொடுத்திருந்தோம். எங்க மனுவைப் பரிசீலிச்ச கலெக்டர் அந்தப் படத்துக்கு தற்காலிக தடை போட்டிருக் காங்க. அதான் எல்லோரும் இவ்வளவு சந்தோஷமா இருக்காங்க.."

"சூர்யா.. உன்கூடக் கொஞ்சம் தனியாகப் பேசணும்.. வெளியே வர்றியாம்மா..?"



"ம்.. வாங்கப்பா..."

நடக்க நடக்கவே பேசிக் கொண்டே வந்தாள்.

"அடுத்து கோர்ட்ல கேஸ் போட்டு நிரந்தரமா படத்தை பெட்டியை விட்டு வெளியே வராமப் பண்ணப் போறோம். அந்த ஆளை ஒரு கை பார்த்துடலாம்னு இருக்கேன். ராஸ்கல்.. நேர்ல வந்து மிரட்டிட்டுப் போறான்.."

"மிரட்டினானா? என்னம்மா சொல்றே...?"

சிரித்தாள் சூர்யா. ரங்கநாதன் பற்றிய விபரங்கள் சொல்லிவிட்டுத் தொடர்ந்தாள்.

"பயப்படாதீங்கப்பா.. எம்பின்னால இத்தனை பேர் இருக்கும்போது அவனால என்னை ஒன்றும் பண்ண முடியாது.."

"அப்படிச் சொல்லாதேம்மா.. இவங்க எல்லோருமே கடைசி வரைக்கும் உன் கூடவே இருப்பாங்கன்னு சொல்ல முடியாது.. அவங்கவங்களுக்கும் ஒரு குடும்பம் கணவன்னு அமையறப்போ போய்டுவாங்க."

"யார் இருந்தாலென்ன. போனாலென்ன.." என்று ஆரம்பித்தவளைக் கையமர்த்தினார் வேதாசலம்.

லேசான கோபத்துடன் அவளை ஏறிட்டார். "நான் அனுப்பி வெச்ச போட்டோக்களைப் பார்த்தியா..?"

"பார்த்தேன்.."

"ரெண்டு நாள்ல பதில் எழுதச் சொன்னேனே.."

"எனக்கு இப்பக் கல்யாணம் வேண்டாம்ப்பா.."

"நீ வேண்டாங்கறதுக்காக நான் என்னோட கடமையைச் செய்யாம இருக்க முடியாது. ஊர்லே நாலு பேர் நாலு விதமா என்னைத்தான் பேசுவாங்க. இப்பவே உங்கம்மாவை என்னால சமாதானப்படுத்த முடியலை.."

"அப்பா.."

"சூர்யா.. உங்கம்மா ஒரு பி.பி. பேஷண்ட்.. உன்னைப் பத்தின கவலையினாலேயே அவ ஆயுசு குறைஞ்சிட்டே வருது.."

"அப்பா.."

"நீ இலட்சியம், கொள்கைன்னு பேச ஆரம்பிச்சதில் இருந்துதான் அவ படுக்கைல விழுந்தா. இப்ப கல்யாணமும் பண்ணிக்க மாட்டேன்னு அடம் பிடிச்சா அவளால தாங்கிக்க முடியாது."

"என்னை நீங்ககூடப், புரிஞ்சிக்க மாட்டேங்கறீங்களே.."

"உன் அம்மாவையும், அப்பாவையும் அவங்க தவிப்பையும் நீ புரிஞ்சிக்கலையேம்மா..."

"ஒரு சமூகப் பிரச்னைக்காக போராடினாள் உங்க மகள்ங்கறது உங்களுக்குப் பெருமை இல்லையாப்பா?"

"நீ ஒருத்தனுக்குக் கழுத்தை நீட்டி ஒழுங்கா குடும்பம் நடத்தினா அது எங்களுக்குப் பெருமை.."



"அப்பா.."

"முடிவாச் சொல்லு.. உனக்கு அப்பா அம்மாவோட சந்தோஷம் முக்கியமா.. இல்லை.. ஊர்ல இருக்கற பிரச்னையெல்லாம் தலைல சுமக்கறதுதான் முக்கியமா..?"

"ரெண்டுமே முக்கியம்தான்ப்பா.. உங்க சந்தோஷத்துக்காக நான் கல்யாணம் பண்ணிக்கத் தயார். ஆனா வரப்போறவர் கிட்டே நான் என்னைப் பத்தி பேசியாகணும். என் கொள்கைகளுக்கும் இலட்சியத்துக்கும் தடையா இருக்கற ஒருத்தர்க்கு நான் கழுத்தை நீட்ட முடியாது.."

வேதாசலம் மலர்ந்த முகத்தோடு நிமிர்ந்தார்.

"நீ. கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னதே எனக்குச் சந்தோஷமா இருக்கு சூர்யா. உன்னோட ஒத்துப் போறவனாப் பார்த்து உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கறது என் பொறுப்பு.. போதுமா..?"

அசுவாரஸ்யமாய் சரி என்று தலையாட்டினாள்.

## 8

**மே**னேஜர் டிக்டேட் பண்ணியதை ஸ்க்ரிப்ளிங் பேடில் சுருக்கெழுத்தாய் பதிவு செய்து கொண்டு தன் இருக்கைக்கு வந்து கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தாள். அதே விநாடி ஹெட்கிளார்க் அழைத்தார்.

"சூர்யா உனக்குப் போன்.."

வேகமாய் எழுந்து போய் மேஜையில் கவிழ்த்தப் பட்டிருந்த ரிசீவரை கையில்

எடுத்துக் காதோடு உரச விட்டாள்.

"ஹலோ.. சூர்யா ஹியா.."

"நான் ரங்கநாதன்.."

இறுக்கமான குரல் மறுமுனையிலிருந்து வந்தது.

"ஓ.. நீங்களா.. சொல்லுங்க சார்.. என்ன விஷயம்..?"

"என் பேச்சை நீ மதிக்கலையே.."

"சாரி சார்.."

"சாரி சொன்னா பிரச்னை தீர்ந்துடாதம்மா.. எனக்கு எவ்வளவு நஷ்டம் தெரியுமா..?"

"நீங்க எவ்வளவோ நல்ல பிசினஸ் பண்ணலாம். நிம்மதியா இருக்கலாம். இந்த மாதிரி பிசினஸ் எல்லாம் என்னிக்குமே பிரச்னைதான்.."

"நீ எனக்குப் புத்திமதி சொல்லாதே.."

"உங்களுக்குக் கல்யாணம் ஆயிடுச்சா சார்."

"ஆயிடுச்சு.. ஏன்?"

"உங்க மனைவியைக் கேட்டுப் பாருங்க சார். இந்தத் தொழில் அவங்களுக்குச் சம்மதமான்னு.. ஒரு வார்த்தைக் கேட்டுப் பாருங்க.."

சிரித்தார் ரங்கநாதன்.

"பொண்டாட்டியை அடக்கி வைக்கத் தெரியாத மடையன்தான் தொட்டது தொண்ணூறுக்கும் அவகிட்ட அபிப்ராயம் கேட்டிட்டிருப்பான். புருஷன் கொண்டு



வந்து போடறதை வெச்சு குடும்பத்தை நிர்வாகம் பண்றதோட அவளோட ட்யூட்டி முடிஞ்சது. இதெல்லாம் அவ தெரிஞ்சிக்க வேண்டிய அவசியமில்ல.."

"மனைவிக்குத் தர வேண்டிய மரியாதை கூட தராத உங்ககிட்டப் போய் மத்த பொண்ணுங்களை மதிக்கற மனோபாவத்தை நான் எதிர்பார்க்கறது தப்புதான். எனக்கு நிறைய வேலை இருக்கு.. போனை வெச்சிரட்டுமா..?"

"இரும்மா.. எதுக்காகப் போன் பண்ணினேனோ அதைச் சொல்லாம மத்த கதையைப் பேசிட்டிருக்கேன்.."

"எதுக்காக போன் பண்ணினீங்க..?"

"உனக்கு இன்னொரு சான்ஸ் தர்றேன்.."

"எதுக்கு..?"

"என்கிட்ட மோதாம இருக்க..."

"உங்களுக்கும் எனக்கும் என்ன முன் பகையா? முன் விரோதமா? ஏன் சார் உங்ககிட்ட நான் மோதணும்.? உங்க ஆபாசப் படங்களைத்தான் நான் எதிர்க்கறேன்.."

"சரி. கலெக்டர் கிட்ட மனு குடுக்கறதோட நிறுத்திக்கோ. கோர்ட், கேசுன்னு போகாதே."

"சாரி சார்.."

டொக்.

## 9

பிளாக் போர்டில் கவனமாக இருந்த ஐம்பத்தி சொச்ச மாணவிகளில் ஒருத்தியாக உட்கார்ந்தாள் விஹினி. ஊதா நிறப்

புடவையில் அன்றைக்கு ரொம்பவும் அழகாக தெரிந்தாள். லெக்சரர் எந்திரத்தனமாய் ஒரு ஸ்டேட்மென்ட்டை விளக்கிக் கொண்டிருக்க... வாஹினியின் கவனம் சட்டென்று சிதறிக் கொண்டிருந்தது.

காலையில் பஸ் ஸ்டாப் சம்பவம் மனசைக் கீறியது.

'ஸ்க்கவுன்ட்ரல்ஸ..'

ஒருத்தன் ஸ்டோன் வாஷும் கறுப்புக் கண்ணாடியுமாய்.. இன்னொருத்தன் அடிக்க வருகிற சிவப்பில் பனியனை கறுப்பு எழுத்தில் தொளதொளப்பாய் மாட்டிக் கொண்டு எண்ணெய் கண்டு வருஷக் கணக்கான பரட்டைத் தலையை அடிக்கடி எரிச்சல் ஊட்டும் விதத்தில் கோதி விட்டுக் கொண்டு..

"பேபி பேரு என்னவா இருக்கும்னு நினைக்கறே..?"

"கேட்டுடலாமா..?"

"வேண்டாம். கையில வெச்சிருக்கற புக்கை எட்டிப் பாரு.."

"இங்கிலீஷ் லெட்டர்ல வி-ன்னு தெரியுது..",

"விமலாவா..? வித்யாவா..?"

திரும்பி அவர்களை உஷ்ணமாய் முறைத்தாள் வாஹினி.

"முறைச்சாலும் அம்மணி அழகுதான்.."

ஒருத்தன் கன்னத்தில் போட்டுக் கொண்டான்.



"யப்பா.. அம்பாள் தரிசனம்.."

"நான் பேரைக் கண்டுபிடிச்சிட்டேன். பாப்பா பேரு வாஹினி.."

"பேரு வெச்சா ஆத்தா.. ஸ்பெல்லிங் மிஸ்டேக் பண்ணிட்டா மச்சி.. வாஹினி இல்ல.. இவ மோகினி.."

ஜிவுஜிவுன்னு கோப ரத்தம் தலைக்கு ஏறியது வாஹினிக்கு.

'ராஸ்கல்ஸ்.. இவன்களைச் சும்மா விடக்கூடாது.' ஸ்லிப்பரை எடுக்கச் சொல்லி கைகளைப் பரபரக்க வைத்தன மூளையின் செல்கள்.

அதே.விநாடி –

பஸ் ஜிர்ரென்று ஸ்டாப்பிங்கில் வந்து நிற்க –

'தொலையட்டும் சனியன்கள்..' என்று மனசுக்குள் திட்டிக்கொண்டு வேகவேக மாய்ப்போய் பஸ் ஏறினாள் வாஹினி.

கூட்ட நெரிசலில் ஒரு சவுகரியமான இடத்தில் கம்பியைப் பற்றிக் கொண்டு நின்ற வாஹினி திரும்பிப் பார்த்ததும்..

திடுக்கிட்டாள்.

அதே ஆட்கள்.

முகத்தைச் சுளித்துக் கொண்டு ஜன்னலைப் பார்த்துக் கொண்டு நின்றவள் சொற்ப விநாடிகளுக்குள் நிதானம் இழந்தாள். ஒருவன் பஸ்ஸின் குலுங்கலைப் பயன்படுத்தி அவளை உரச முற்பட.. பளீரென்று ஒரு அறை விட்டாள் வாஹினி.

அறை வாங்கியவன் பொறிகலங்கி போய் பின்வாங்க மற்றவர்கள் மிரண்டார்கள்

வாஹினி உறுமினாள்.

"வாடா.. வந்து உரசு.."

பஸ் கிறீச்சிட்டு நின்றது. வாஹின தொடர்ந்தாள். "உங்கள்ல எவனாவது ஆம்பிளையா இருந்தா என்னை உரசுங்கட பார்க்கலாம்.. ஏமாந்த பயந்த பொண்ணு எவளாவது இருந்தா உங்களுக்குத் தோளைக் கொடுத்திட்டு நின்னிட்டிருப்பா என்னை மாதிரியான பொண்ணுங்கள உரசி பாருங்கடா.. ராஸ்கல்ஸ்.."

டிரைவர் கத்தினார். "ஏண்டா இ ராஜாக்களா..? போலீஸ் ஸ்டேஷன் போலாமா..?"

"அண்ணே.. வேண்டாம்."

"அப்படீன்னா அந்தப் பொண்ணுகிட்ட மன்னிப்புக் கேட்டுட்டு ஓடுங்கடா.."

நான்கு பேரும் இறங்கி ஓடினார்கள்.

"வாஹினி.. வாஹினி.."

பக்கத்திலிருந்தவள் உசுப்பியதும் சு நினைவுக்கு வந்தாள் வாஹினி.

வகுப்பு வாசலில் காக்கிச் சட்டையும் காக்கி பேண்ட்டுமாய் ஒருவன் நின்றிருக்க லெக்சரர் விசாரித்துக் கொண்டிருந்தார்.

"வாஹினி உங்களுக்கு என்ன வேணும்..?"

"அவங்க வீட்டுக்குப் பக்கத்திலிருக்கற ஆட்டோ டிரைவர் சாமிக்கண்ணு என்னை



அனுப்பிச்சாருங்க.."

அவர் வாஹினியிடம் திரும்பிக் கேட்டார்.

"இவர் சொல்ற சாமிக்கண்ணுவைத் தெரியுமா?"

"அவர் எங்க ஃபேமிலி ப்ரெண்ட் மேடம்.."

"உன் சிஸ்டர் சூர்யாவுக்கு ஏதோ ஆக்சிடெண்ட்டாம்.. உன்னைக் கூட்டிப் போக வந்திருக்கார்.."

பதறிப்போன வாஹினி அவசர அவசரமாய் புத்தகங்களை அள்ளினாள். பதட்டத்துடன் வகுப்பறையை விடடு வெளியே வந்தாள்.

"அக்காவுக்கு என்ன ஆச்சு..?"

"எனக்கு சரியான விபரம் தெரியலீங்க.. மெட்ராசிலிருந்து தந்தி வந்திருக்கறதா சாமிக்கண்ணு சொன்னார்.."

"அப்பா எங்கே..?"

"நியூசைக் கேட்டதும் உங்க அம்மா மயக்கமா கிட்டாங்க.. பக்கத்திலிருக்கற டாக்டரை அழைச்சிட்டு வரப் போனார். என் டாக்ஸியிலதான் மெட்ராஸ் போகப் போறாங்க.."

சொற்ப தொலைவில் கறுப்புப் பெயிண்ட்டில் குளித்திருந்த அம்பாஸிடர் கண்ணிலடித்தது.

'என்ன ஆக்சிடெண்ட்..?'

'இப்போதுதானே பேனரிலிருந்து விழுந்து தொலைத்து ஓரளவு நன்றாயிருக்கிறாள்.'

அவன் காரின் பின் கதவைத் திறந்துவிட பதட்டமான சிந்தனையுடனே உள்ளே ஏறி

உட்கார்ந்து கொண்டாள்.

பட்டென கதவை அறைந்து சாத்தினவன் டிரைவிங் இருக்கைக்கு வந்து அமர்ந்து ஸ்டியரிங் பிடித்தான். இக்னீஷியனை உசுப்பியதைத் தொடர்ந்து..

டாக்ஸி பறந்தது.

## 10

'மேகா ப்ராடக்ட்ஸ்' என்ற நியான் எழுத்துகளுடன் இருந்த பிரம்மாண்டமான கட்டிடத்தின் வாயிலைத் தொட்டாள் சூர்யா. மறித்த செக்யூரிட்டியிடம் கைப் பையைத் திறந்து அந்த லெட்டரைக் காட்டினாள்.

"ஏ.ஆர். சாரைப் பார்க்க வந்தீங்களா.. லெப்ட்ல போங்க.. கண்ணாடி பதிச்ச ஜன்னல் தெரியுதா? அந்த ரூம்தான்.."

நடந்தாள்.

மஞ்சள் நிற கர்ட்டன் அசைகிற அந்த ஜன்னலை நோக்கி உத்தேசமாக நடந்தாள். இரண்டு பக்கமும் பூந்தொட்டிகள் அணி வகுத்திருந்த முகப்பை அடைந்து மொசைக் படிகளில் ஏறினாள்.

நாலைந்து அறைகளைக் கடந்திருந்த போது கதவில் பிளாஸ்டிக் எழுத்துகள் பளிச்சென்று பார்வையில் பட்டன.

**ADVERTISING MANAGER**
**A. RAMAMOORTHY**

"எக்ஸ்க்யூஸ் மீ.. சார்.." கதவைத் தட்டினாள்.

"எஸ்.கம்மின்.."



கதவின் கைப்பிடியைக் கீழே அழுத்தி உள்ளே போனாள் சூர்யா. ஏ.சியின் ஜில்லென்று குளிர் உடம்பில் பரவியது. கம்பெனியின் லாப நஷ்டக் கணக்குள் க்ராப் வரைபடங்களாக சுவரில் தொங்கிக் கொண்டிருந்தன.

வழுக்கைத் தலை, செவ்வக கண்ணாடி சபாரி சூட்டில் இருந்த அந்த ராமமூர்த்தியைப் பார்த்துக் கை கூப்பினாள்.

"வணக்கம் சார்.."

அவர் புருவத்தை சுருக்கிக் கொண்டு அவளைப் பார்த்தார்.

சூர்யா தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"நான் சூர்யா. பெண்கள் முன்னேற்ற இயக்கம்னு ஒரு அமைப்பை நடத்திட்டு வர்றேன்.."

"ஓ... நீதான் லெட்டர் போட்டு என்னைச் சந்திக்க விரும்பினதாச் சொன்ன பொண்ணா..?"

"ஆமாம்.."

"உட்காரும்மா.."

எதிர் நாற்காலியைக் காட்டினார்.

அவள் உட்கார்ந்தபின் கேட்டார்.

"என்ன விஷயம்..?"

"அத சொல்றதுக்கு முன்னாடி எங்க அசோசியேஷனைப் பத்தி உங்களுக்குச் சொல்ல விரும்பறேன் சார்.."

ராமமூர்த்தி சிகரெட் பாக்கெட்டை

திறந்து சிகரெட் ஒன்றை உதட்டுக்குப் பொருத்தி லைட்டரில் அதற்கு கம்பீரமாக உயிர் கொடுத்தார்.

அந்த சிகரெட்டை அவர் முழுசாக ஆஷ்ட்ரேயில் சாம்பலாக்கி தட்டியிருந்த போது சூர்யா தன் அசோசியேஷனைப் பற்றிச் சொல்லி முடித்திருந்தாள். ராமமூர்த்தி கேட்டார்.

"டொனேஷன் ஏதாவது எதிர்பார்க்கறீங்களா?"

"நோ..நோ.. உங்க கம்பெனி விபரங்கள் எல்லாமே மக்கள் மத்தியில் ஈர்க்கும் விதத்தில் அமைஞ்சிருக்கு.. அதைப் பத்தி உங்ககிட்டப் பேசணும்.."

"என்ன பேசணும்..?"

"ஒரு பர்டிகுலர் விளம்பரம் மட்டும் எங்களுக்கு சம்மதமாயில்லை. டி.வி.யில் தினமும் ஏழு நாற்பதுக்கு அந்த விளம்பரம் ஒளிபரப்பாகுது.."

"செவன் ஃபார்ட்டி.. யூ மீன் அந்த ஷேவிங் க்ரீம் விளம்பரம்.."

"அதான் சார்.."

"அதிலென்ன ப்ராப்ளம்..?"

"அநாவசியமா அதுல ஒரு பொண்ணு டூ பீஸ்ல நீச்சல் குளத்துல குதிக்கறா..."

"இதெல்லாம் விளம்பர யுக்தி. ப்ராடக்ட் மனசுல பதிய வேண்டாமா.."

"நோ சார். அங்கே ஒரு பெண்ணை அசிங்கப்படுத்திக் காட்சிப் பொருளாக்கி



இருக்கீங்க.."

"விஷயங்களைப் பெரிசு படுத்திப் பார்க்கறீங்க."

"வைரஸும், பாக்டீரியாவும் பெரிசு படுத்திப் பார்க்கறப்போதான் கண்ணுக்குத் தெரியும். அந்த நோய்க்கிருமிகளைவிட மோசம் உங்க விளம்பரம். ஷேவிங் க்ரீமுக்கும் அந்தப் பெண்ணுக்கும் என்ன சார் சம்பந்தம்..?"

"அதுக்காக என்ன பண்ணும்ங்கறே...?"

"அந்த விளம்பரத்தை நிறுத்திடுங்க.."

"விளம்பரத்தை நிறுத்தறதா..?"

சிரித்தார் ராமமூர்த்தி.

"அதை நிறுத்த முடியாதம்மா..."

"ஏன்.. ஏன்.. முடியாது.."

"அதோ அந்த சுவத்துல மாட்டியிருக்கற க்ராப் பத்தி உனக்குத் தெரியுமா? அந்த விளம்பரம் வந்த பிறகுதான் ப்ராடக்ட் விற்பனைல நல்ல மாறுதல் அடைஞ்சிருக்கறதா ஸ்டாட்டிஸ்டிகல் ரிப்போர்ட் சொல்லுது.."

"விளம்பரம் பண்ணுங்க சார்.. நா வேண்டாங்கலை. ஆனா பெண்ணுக்கு சம்பந்தமில்லாத விளம்பரம் பண்றது நாகரீகமாப் படலை.."

"லட்சக்கணக்கில் செலவு பண்ணி விளம்பரம் போடறோம். அந்த சங்கத்துக்குப் பிடிக்கலை. இந்த சங்கத்துக்குப் பிடிக்கலைங்கறதுக்காக நிறுத்த முடியாது."

"இதுதான் உங்க முடிவா..?" சூர்யா குரலை உயர்த்தியதும் ராமமூர்த்தி முகம் மாறினார்.

"என்னம்மா மிரட்டறே..?"

"மிரட்டலை சார், நியாயத்தை எடுத்துச் சொன்னேன். நீங்க கேட்கலை. ஒண்ணு மட்டும் என்னால உறுதியாச் சொல்ல முடியும்.. கூடிய சீக்கிரம் அந்த விளம்பரத்தை ஒளிபரப்ப முடியாத நிலைமை வரும். அப்புறம் எம்மேல வருத்தப் படாதீங்க.."

எழுந்தாள் சூர்யா.

## 11

**சூ**ர்யாவைப் பற்றிய சிந்தனையோடு டாக்ஸிக்குள் உட்கார்ந்திருந்த வாஹினி, 'இன்னுமா வீடு வரலை..?' என்ற யோசனை மேலிட வெளியே பார்த்தபோதுதான் உணர்ந்தாள்.

கார் வேறு பாதையில் போய்க் கொண்டிருந்தது.

"டிரைவர்.. எங்கே போறீங்க...?"

பதட்டமாய்க் கேட்டவளுக்கு டிரைவர் பதில் சொல்லாமல் சாலையில் செல்வதில் கவனமாய் இருந்தான்.

"யா..யாரு.. நீ...? என்னை எங்கே கூட்டிட்டுப் போறே....?"

"நீ.. ரொம்பப் புத்திசாலிப் பொண்ணுன்னு சொன்னாங்க.. ஆனா அப்படித் தெரியலையே...?"



அவன் கண்ணாடி வழியாகப் பார்த்து மறுபடியும் சிரித்தான்.

வாஹினி பதறினாள்.

"ஏய்.. நீ யாரு..?" கேட்டுக் கொண்டே கதவைத் திறக்க முயன்றாள்.

அது இறுக்கமாய் லாக் ஆகியிருந்தது.

"யூ.. ராஸ்கல்.." வாஹினி கத்திக் கொண்டே... அவன் தோளைப் பற்றி உலுக்க ஆரம்பித்தாள்.

'டிரைவிங்கிலிருந்து அவன் கவனம் சிதறட்டும்.' என்கிற வெறியோடு வேகமாக அவனை உலுக்கினாள்.

கொஞ்சம் தடுமாறினவன் இடது கையால் அவளை சுலபமாய்த் தள்ளிவிட...

பின் சீட்டில் தொப்பென்று விழுந்தவள் மீண்டும் அவனை நோக்கி வந்தபோது பேண்ட் பாக்கெட்டிலிருந்து அந்த கர்ச்சீப்பை உருவித் தயாராக வைத்துக் கொண்டான். மயக்க மருந்து தூவப்பட்ட கர்ச்சீப் அது.

அவள் அவன் தோளைப் பற்றி ஆக்ரோஷமாய் உலுக்க முற்பட்டபோது கர்ச்சீப்பைக் கொண்டு போய் அவள் முகப்பரப்பில் பொருத்தினான்.

முப்பதே விநாடிகள்.

அவனோடு போராடிக் கொண்டே பின் சீட்டில் சரிந்தாள் வாஹினி.

பத்து நிமிஷத்தில் ஊரை விட்டு ஒதுங்கியிருந்த அந்த பங்களாவில் கார் பிரவேசித்தது.

கார் வந்து நின்றதும் இரண்டு பேர் ஓடி வந்தார்கள். ஒருவன் கதவுகளை விடுவிக்க.. இன்னொருவன் அவளை அள்ளிக் கொண்டான்.

## 12

ஆஃபீஸை விட்டு வெளியே வந்த சூர்யா, "ஹலோ சூர்யா.." என்ற குரல் கேட்டுத் திரும்பினாள்.

ஒரு இளைஞன் புன்னகையோடு ஹீரோ ஹோண்டாவின் சீட்மேல் பக்கவாட்டில் உட்கார்ந்திருந்தான்.

"எஸ்.."

"ஐம் விஜய்குமார்."

"வி..ஜ..ய்.. குமார்? ஓ... அப்பா லெட்டர்ல எழுதியிருந்த விஜய்குமார் நீங்கதானா?"

"நானேதான்.."

"எனக்காகத்தான் வெயிட் பண்ணிட்டு இருந்தீங்களா..?"

"ஆமா."

"என்ன விஷயம்..?"

"நம்ம கல்யாண விஷயம்தான்.."

"நான் அப்பாகிட்டே என்னோட முடிவைச் சொல்லிட்டேனே..."

"நான் கொஞ்சம் உங்ககூடப் பேசணும்.."

"பேசுங்களேன்.."

"பீச்சுக்குப் போவோம். பைக்ல என்னோட வர்றதுல உனக்கு ஆட்சேபணை எதுவுமில்லையே."



"நோ அப்ஜெக்ஷன்.."

அவன் கிக்கரை உதைக்க ஹோண்டா ஸ்டார்ட் ஆகிக் கதறியது. பில்லியனில் பட்டுக் கொள்ளாமல் உட்கார்ந்து கொண்டாள் சூர்யா. ட்ராபிக் வழிகிற சாலைகளில் விரைந்த பைக் சொற்ப நிமிஷங்களை கரைத்து பீச் ரோட்டைத் தொட்டது.

அந்த சாலையோர பூங்கா அருகில் பைக்கை நிறுத்தி க்ரில்லைக் கடந்து புல் தரையில் அமர்ந்தார்கள். சூர்யா புன்னகைத்தாள்.

"என்ன பேசணும்..? பேசுங்க.."

"கல்யாணமே ஏன் வேண்டாம்னு சொன்னே...?"

"மிஸ்டர் விஜய்குமார், என்னோட இன்னொரு பக்கம் உங்களுக்கு தெரியுமா?"

"தெரியும். உன் அப்பாவே என்கிட்டச் சொல்லிட்டார்.."

"உங்களுக்கு எப்படிச் சொன்னாப் புரியும்னு தெரியலை.. ஐம் நாட் ஃபிட் ஃபார் பேமிலி.. பிகாஸ் என்னோட கவனம் பூராவும் முழுசா இப்ப பெண்கள் சுயமரியாதை மேல இருக்கு. அந்தப் பிரச்னைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்காம என்னால அவ்வளவு சுலபத்தில் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட முடியாது."

"ஏன் முடியாது.. ஆபீஸ் வந்தா ஆபிஸ் பிரச்னைகள்ல கவனம் செலுத்தறே.. அசோசியேஷன் போனா அந்தப் பிரச்னை

கள்ல தனித்தனியா உன்னால செய்ய முடியும்போது இது மட்டும் ஏன் முடியாது.."

"ஆபீஸ் வேற. அது கடமை. வயித்துப் பாட்டுக்கு ஒரு வழி. ஆனா புருஷன் பொண்டாட்டி உறவு கடமைக்காக இருக்கக் கூடாது."

"இதெல்லாம் உன் மனசுக்குத் தெரிஞ்சிருக்கறதே போதும். யு கேன் பி எ குட் ஒய்ப்."

"ஸோ.. உங்க முடிவில் எந்த மாற்றமு மில்லை."

"இல்லை.."

"புருஷனைவிட எனக்கு இலட்சியத் துக்குப் போராடறதுதான் முக்கியமான விஷயம்ங்கறது உங்களை உறுத்தாதா?"

"உறுத்தாது.."

"சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் உங்க பர்மிஷனை எதிர்பார்த்துட்டு நான் இருக்க மாட்டேன். இப்ப எவ்வளவு சுதந்திரமா இருக்கேனோ அதுலேர்ந்து இம்மியளவு கூட என்னை நான் கட்டிப் போட்டுக்க மாட்டேன். அதைப் பத்தி உங்களுக்குக் கவலையில்லையா?"

சிரித்துக் கொண்டே அவன் தலையசைத்தான்.

"கவலையில்லை. உன்னோட ஓய்வு நேரத்தை நீயா பார்த்து எனக்காக ஒதுக்கினாக் கூடப் போதும்."

"ஷ்யூர்.."



"ஷ்யூர்.. சத்தியம் வேணா பண்ணட்டுமா..?"

## 13

சுய உணர்வு வந்து கண்விழித்தாள் வாஹினி.

அடர்ந்த புதர் கண்ணில் பட-

பறவைகளின் சத்தம் சுற்றிலும் கேட்டது.

மெதுவாகக் கையை ஊன்றி எழுந்து உட்கார்ந்தாள். மார்பிலும் அடி வயிற்றிலும் வலி தெரிந்தது.

தான் ஏதோ ஒரு பார்க்கின் அடர்ந்த புதருக்குள் உருட்டி விடப்பட்டிருப்பதை உணர்ந்தாள் வாஹினி. சுற்றிலும் இருட்டு பரவுவதைப் பார்த்து விட்டு மணிக்கட்டை உயர்த்திப் பார்த்தாள். வாட்ச்சின் டயல் க்ளாஸ் நொறுங்கியிருந்தது. ஆனால் விநாடி முள் நொண்டிக் கொண்டிருந்தது.

மணி 5.35. பக்கத்தில் கிடந்த தன் டம்பப் பையை எடுத்துக் கொண்டு மெல்ல தளர்ச்சியால் நடந்து ரோட்டுக்கு வந்தாள்.

'தன்னைக் கடத்திக் கொண்டு வந்தவர்கள் அவுட்டர் சாலையோர பூங்காவுக்குள் கொண்டு வந்து போட்டு விட்டுப் போயிருக்கிறார்கள்!'

'இதைச் செய்தது யார்? பஸ்ஸில் நான் மோதிக் கொண்ட ரவுடிகள்தானா?'

'நிச்சயம் நான் சூறையாடப்பட்டு விட்டேன். சந்தேகமேயில்லை..'

சென்னை போகிற பஸ் ஒன்று

உறுமிக்கொண்டு வர வாஹினி அதைக் கை காட்டி நிறுத்தி ஏறிக் கொண்டாள். கும்பல் இல்லாத பஸ்ஸில் ஜன்னலோர சீட்டைப் பிடித்து உட்கார்ந்தாள்.

ஒரு மணி நேரம் ஜன்னலோரப் பயணம்.

பூக்கடை பஸ் ஸ்டாப்பில் இறங்கி ஒரு ஆட்டோ பிடித்து வீடு வந்து சேர்ந்தாள். அம்மா க்ரைண்டரில் மாவை வழித்து பாத்திரத்தில் போட்டுக் கொண்டிருக்க அப்பா டி.வி.யில் அறிவியல் ஆயிரம் பார்த்துக் கொண்டிருந்தார். திரும்பினார்.

"என்னம்மா வாஹினி.. இன்னிக்கு லேட்..? காலேஜ்ல ஏதாவது கேம்ஸா.. நானும் உங்கம்மாவும் கோயிலுக்குப் போகக் காத்திட்டிருக்கோம்.."

"........."

வாஹினி பேசாமல் உள்ளே போனாள்.

"உன்னைத்தாம்மா..."

வாஹினி நின்றாள்.

"என்னப்பா கேட்டீங்க..?"

"காலேஜ்ல இன்னிக்கு கேம்ஸான்னு கேட்டேன்."

"ஆ...ஆமா.."

"ஏம்மா என்னவோ மாதிரி இருக்கே...?"

"த..த..தலைவலி.."

"தலைவலியா...? மாத்திரை போட்டுக் கோம்மா. அம்மாவை காப்பி கொண்டாரச் சொல்றேன். ராஜம் வாஹினிக்கு தலைவலி யாம். சூடா காப்பி போட்டுக் கொடு.."



வாஹினி தன் அறைக்குள் நுழைந்து. கட்டிலில் குப்புறப்படுத்துக் கொண்டாள்.

'என்ன செய்யலாம்..?'

'போலீஸுக்குப் போகலாமா?'

'வேண்டாம். போலீஸுக்குப் போனால் விவகாரம் வீதிக்கு வந்து விடும். பத்திரிகை கள் போட்டோ போட்டு பத்தி பத்தியாய் எழுதி விடும். அப்பாவுக்கும் சரி. அம்மாவுக்கும் சரி. அந்த அவமானத்தை யெல்லாம் தாங்கிக் கொள்ளக் கூடிய நெஞ்சுரம் இல்லை. தைரியம் அறவே கிடையாது.'

திரும்பிப் படுத்தாள் வாஹினி.

அடிவயிறு விண் விண்ணென்று வலித்தது.

அம்மாக்காரி ராஜம் உள்ளே நுழைந்தாள். காபி தம்ளரோடு.

"தலையை வலிச்சா நேரா வீட்டுக்கு வந்துவிட வேண்டியதுதானே.. ஏன் கேம்ஸ் விளையாடறே.?"

வாஹினி எழுந்து உட்கார்ந்தாள். மகளின் முகத்தைப் பார்த்த ராஜம் துணுக்குற்றாள்.

"ஏண்டி என்னவோ மாதிரி இருக்கே..?"

வாஹினிக்கு அழுகை வரப் பார்த்தது.

'அம்மாவிடம் சொல்லி விடலாமா?'

'வேண்டாம்.. தாங்க மாட்டாள்.'

"ஏண்டி கேட்டது காதுல விழலை..?ஏன் என்னவோ மாதிரி இருக்கே..?"

"த...தலையை ரொம்ப வலிக்குதம்மா..."

"மாத்திரையை போட்டுகிட்டியா..?"

"ம்.."

"இந்த சூடா காப்பியை குடி. உடனே டி.வி. பார்க்க வந்துடாதே.. ஒரு மணி நேரம் படுத்து ரெஸ்ட் எடு.. தலைவலி போயிரும். நானும் அப்பாவும் கோயிலுக்குப் போய்ட்டு வர்றோம். நீ வீட்ல தனியா இருப்பியா..?"

"ம்.."

"நான் வந்து டிபன் பண்ணிக்கறேன்.. நீ சமையலறைப் பக்கம் போயிடாதே..."

"ம்.."

வாஹினி வேண்டாவெறுப்பாய்க் காப்பியைக் குடித்துக் கொண்டிருக்கும் போதே வேதாசலமும், ராஜமும் கோயிலுக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

அவர்கள் தெருமுனையைக் கூடத் தாண்டியிருக்க மாட்டார்கள். தம்ளரைக் கீழே வைத்துவிட்டு வாசலுக்குப் போய் கதவைச் சாத்தினாள். பின் விடுவிடுவென்று சமையலறைக்கு வந்தாள்.

சமையலறை ஷெல்புக்குக் கீழேயிருந்த கெரோஸின் டின்னையும், திட்டின் மேலிருந்த தீப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு சம்மணம் போட்டு உட்கார்ந்தாள்.

பாத்ரூமில் நிதானமாய்க் குளிக்கிற சைஸில் கெரஸின் டின்னை தலைக்கு மேலே உயர்த்தி தெப்பல் தெப்பலாய் தன் உடம்பை நனைத்துக் கொண்டாள்.



காற்றில் கெட்டியாய் மண்ணெண்ணெய் வாசம். தீப்பெட்டியிலிருந்து ஒரு குச்சியை எடுத்து உரசி தன் உச்சந்தலையில் வைத்துக் கொள்ள -

அடுத்த விநாடிகளில் -

ஒரு தீப்பந்தம் போல -

திகுதிகுவென்று எரிய ஆரம்பித்தாள்.

ஒரு அலறல் இல்லை. சின்னதாய் வலி முனகல் இல்லை. இரண்டு நிமிஷத்துக்குப் பிறகு உடம்பு கரிக்கட்டையாய்த் தீய்ந்து ஒரு பக்கமாய்ச் சரிந்தது.

## 14

**வி**ஷயம் கேள்விப்பட்டபோது சூர்யாவுக்கு பகீரென்றது. 'வாஹினி ஏன் தற்கொலை செய்து கொண்டாள்?'

'காரணமில்லாமல் யாராவது செத்துப் போவார்களா?'

'யாரையாவது காதலித்து ஏமாந்தாளா?'

'இருக்காதே. என்னிடம் சொல்லாமல் இருக்க மாட்டாளே..?'

போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டில் வாஹினி தன் கற்பை இழந்திருக்கிறாள் என்ற உண்மை வெடித்த போது சூர்யா சம்மட்டியால் தாக்கப்பட்ட மாதிரி நிலைகுலைந்து போனாள்.

'என்ன நேர்ந்தது?'

'யார் ஏமாற்றினார்கள்...?'

மூன்று நாட்கள் இன்வெஸ்டிகேஷனில் சூர்யாவின் கேள்விக் குறிகளுக்கு முற்றுப்

புள்ளி வைத்தார்கள் போலீஸ் அதிகாரிகள்.

பஸ் ஸ்டாபில் சில ரவுடிகள் வாஹினியைத் தொடர்ந்து சீண்டியிருக்கிறார்கள். சீண்டல் பஸ்ஸில் தொடர அவள் ஸ்லிப்பரால் அடித்து அவர்களில் ஒருவனை அவமானப்படுத்தி யிருக்கிறாள்.

அவளைத் திட்டம் போட்டுக் கடத்திக் கொண்டு போய் கற்பை சூறையாடியிருக்கிறார்கள். அந்த ஆசாமிகளை வலைவீசித் தேடிக் கொண்டே இருக்கிறார்கள்.

சூர்யா இரண்டு வாரம் லீவ் போட்டு அவள் காரியங்களை முடித்தாள்.

வினய்குமார் வந்து அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

"அதையே நினைச்சிட்டிருக்காதே.."

"பதினேழு வருஷம் பக்கத்திலேயே இருந்தவ. இப்படி ஒரு சாவை என்னால ஜீரணிக்க முடியலை."

அவள் அழுது ஓயும் வரை மௌனமாய் இருந்த வினய் குமார் மெல்லிய குரலில் ஆரம்பித்தான்.

"உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்..."

நிமிர்ந்தாள்.

"உன் சிஸ்டர் இறந்த அதிர்ச்சியிலிருந்து நீயும் உன் பேரண்ட்ஸும் இப்பதான் ரெகவர் ஆயிட்டு வர்றீங்க.. இந்த சமயத்துல நான் இதைச் சொல்லக் கூடாதுதான். இருந்தாலும் சொல்லியாகணும்.."



சூர்யா அவனைக் கையமர்த்தினாள்.

"நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குத் தெரியும்.."

"என்ன..? சொல்லு பார்க்கலாம்.."

"என் தங்கச்சிக்கு இப்படி ஒரு முடிவு நேர்ந்ததுக் கப்புறம் எங்க குடும்பத்துல சம்பந்தம் வெச்சுக்கறதுல உங்களுக்கு இஷ்டமில்ல. இதைத்தானே சொல்லப் போறீங்க.."

அவன் புன்னகைத்தான்.

"நோ..நோ... ஏற்கனவே நாம ஃபிக்ஸ் பண்ணின தேதியிலயே நம்ம மேரேஜ் நடக்கணும்னு விரும்பறேன்.."

சூர்யா திகைப்போடு நிமிர்ந்தாள்.

"ஏன்னா கிராமத்துல இருக்கற என்னோட அம்மா என்னை கல்யாணக் கோலத்துல பார்க்கணும்ங்கிறது அவங்களோட ஆசை. அவங்களுக்காகவாவது என் மேரேஜ் நடந்தாகணும்..."

## 15

சூர்யாவுக்கு எல்லாமே கனவு மாதிரி இருந்தது. ஒரே மாதத்தில் மண்டபம் பிடித்து.. பத்திரிகை அடித்து விநியோகம் செய்தது.. இப்போது கல்யாணமும் முடிந்தாயிற்று.

ஒரு வாரமாய் அசோசியேஷன் பக்கமே போகவில்லை. வினய்குமாரின் நண்பர்கள் வீட்டுக்கும், சொந்தக்காரர்கள் வீட்டுக்கும் விருந்துக்குப் போவதற்கே நேரம் சரியாக

இருந்தது. இடையில் ஒருநாள் யாதவ் வந்திருந்தான்.

"இயக்கம், இலட்சியம் எல்லாத்தையுமே மறந்துடுவீங்க போலிருக்கே..?"

"நோ..நோ.. லீவ் முடிஞ்சு ஆபீஸ் போக ஆரம்பிச்சதுமே ரொட்டீன் லைப் ஆரம்பிச்சிடும்."

வினய் குமாரைப் பல விஷயங்களில் சூர்யாவுக்குப் பிடிச்சிருந்தது.

எதைச் செய்தாலும் முன்கூட்டியே திட்டமிட்டு ஒழுங்காகச் செய்கிறான். கல்யாணத்துக்கு முன்பே ஒரு வசதியான வீட்டை வாடகைக்கு எடுத்திருக்கிறான். ஃபர்னிச்சர்கள் வாங்கிப் போட்டிருக்கிறான். கேஸ் கனெக்ஷன் வாங்கி வைத்திருக்கிறான். எல்லாவற்றுக்கும் மேலாக கலாரசனை இருக்கிறது.

அன்றைக்குப் பூட்டியே கிடந்த அந்த அறையைச் சுத்தம் பண்ணுவதற்காக அன்றைக்குத் திறந்தவள் ஆச்சர்யத்தில் விழுந்தாள்.

"இது என்ன ரூம்?"

"டார்க் ரூம்.."

"போட்டோகிராபி பண்ணுவீங்களா?"

"அதுதான் என் ஹாபி.."

"என்கிட்ட சொல்லவேயில்லை.."

"நான் சொல்லியிருந்தா இப்ப நீ இவ்வளவு ஆச்சர்யத்துக்கு போயிருக்க மாட்டே..."



"ஆல்பம் ஏதும் வெச்சிருக்கீங்களா?"

"இருக்கு.."

சொல்லிக்கொண்டே அந்த ஷெல்பி லிருந்து ஆல்பம் ஒன்றை எடுத்துக் கொடுத்தான். ஆல்பத்தை விரித்தவள் ஒவ்வொரு போட்டோவைப் பார்த்தும் ஆச்சர்யப்பட வேண்டியிருந்தது.

எலலாமே ஏறக்குறைய விஷுவல் டேஸ்ட்டோடு இருந்தன.

"இதைப் பார்த்தியா..?"

இரண்டு பேர் முதுகைக் காட்டிக் கொண்டு ஒரு நீண்ட பாதையில் நடந்து கொண்டிருந்தார்கள். ஒருவன் தேசியக் கொடியைச் சட்டை தைத்துப் போட்டிருந் தான். இன்னொருவன் கோவணத்துடன் இருந்தான். போட்டோவின் மேலேயே கம்ப்யூட்டர் எழுத்துக்களில்ஆங்கிலத் தலைப்பு ஒட்டியிருந்தது.

"அடுத்த சுதந்திரத்துக்குள் அரைக்கால் சட்டையாவது வாங்கித் தருகிறேன் வா..."

"சூப்பர்" என்றாள் சூர்யா.

"இந்த போட்டோவுக்கு ஹாட்ஷாட் காமிரா கம்பெனி நடத்திய கான்ட் டெஸ்ட்டின் முதல் பரிசு கிடைத்தது."

"இதுல மீனிங் மட்டுமில்லை. டெக்னிக்கல் பர்பெக்ஷன் இருக்கு. ஷார்ப்னெஸ், லைட்டிங் எல்லாமே பிரமாத மாய் இருக்கு.."

வினய்குமார் அடக்கமாய்ச் சிரித்துக்

கொண்டான்.

ஆல்பத்தைப் பார்த்து முடித்துவிட்டு -

டிரஸ்ஸிங் டேபிள் முன்னாலமர்ந்து தலைப் பின்னலைச் சரிப்படுத்திக் கொண்டு கண்ணாடியில் ஒட்ட வைத்திருந்த ஸ்டிக்கர் பொட்டை எடுத்து தன் நெற்றியில் மையம் பார்த்து ஒட்டிக் கொண்டாள்.

ஹேண்ட் பேக்கின் முன் அறையைத் திறந்து டவுன் பஸ்ஸுக்குத் தேவையான சில்லறையை அதில் பொறுக்கிப் போட்டுக் கொண்டாள்.

அறைக்குள் நுழைந்த வினய்குமார் அவளைப் பார்த்து புருவத்தைச் சுருக்கினான்.

"எங்கே கிளம்பிட்டே..?"

"சில விளம்பரங்கள் சம்பந்தமா பேச டி.வி. டைரக்டர்கிட்டே அப்பாயின்மெண்ட் வாங்கி வெச்சிருக்கேன். இன்னிக்கு சாயந்திரம் அஞ்சு மணிக்குத்தான் அவரை மீட் பண்ணணும்.."

"மை குட்னஸ்.." என்று சொன்ன அவன் முகம் மாறியதைக் கவனித்த சூர்யா கேட்டாள்.

"ஏன்..?"

"இன்னிக்கு சதீஷ் நம்ம ரெண்டு பேரையும் வரச் சொல்லியிருக்கான். அவன் வீட்ல டின்னர். காலைல கூட ஃபோன் பண்ணிக் கேட்டான். கண்டிப்பா சாயந்திரம் வர்றோம்னு சொல்லிட்டேன்.."

"என்கிட்டே நீங்க ஒரு வார்த்தை



கேட்டிருக்கக் கூடாதா?"

"வாட்ஸ தோ? சதீஷ் வீட்டுக்குப் போய்ட்டு அப்புறமா நீ டி.வி. ஸ்டேஷனுக்குப் போகலாம்.."

"சதீஷ் வீட்டுக்குப் போனா லேட்டாயிரும்.."

வினய்குமார் சின்னச் சலிப்போடு அவளைப் பார்த்தான்.

"நாம ந்யூலி மேரீட கப்புள்ஸ். மேரேஜுக்காக போட்ட லீவ கூட இன்னும் முடியலை. கூப்பிடறவங்க வீட்டுக்கு லீவ்லதான் போக முடியும். ஆபிஸ் போக ஆரம்பிச்சா... மத்த விஷயங்களுக்கு நேரமிருக்காது.."

"சதீஷ் வீட்டுக்கு வர்ற ஞாயிற்றுக் கிழமை போகலாம்.."

"என்ன சூர்யா.. அசோசியேஷன் வேற நடத்தறே.. ஒரு சின்ன மேனர்ஸ்கூட உனக்குத் தெரியாதா? நமக்காக ப்ரிப்பேர் பண்ணின உணவெல்லாம் வீணாகாதா? அதாவது பரவாயில்லை. அவங்க மனசு வருத்தப்படாதா?"

"நான் சொல்றதைக் கொஞ்சம் முயற்சி பண்ணுங்க. உங்க ப்ரெண்ட்கிட்டே எக்ஸ்க்யூஸ் கேட்டுக்கலாம். ஆனா ஒரு அப்ளிகேஷனோடு டி.வி. டைரக்டரைப் பார்க்கப் போறேன். அவர் கொடுத்த டயத்தில் போய்ப் பார்க்க வேண்டாமா?"

"லுக். இப்ப நீ டி.வி. டைரக்டரைப் பார்க்கறதால எனக்கோ உனக்கோ சல்லிக்

காசு கூடப் பிரயோஜனமில்லை. ஆனா சதீஷ் முகத்தில் நான் இன்னொரு நாள் முழிக்க வேண்டாமா?"

"ஒண்ணு செய்யலாம்.. அஞ்சரைக்கு நான் டி.வி. டைரக்டரைப் பார்க்கறேன் ஒரு மணி நேரம் பேசினா அதிகம். நீங்க உங்க ப்ரண்ட்டோட அட்ரஸ் தந்தீங்கன்னா.. நான் எப்படியும் ஏழு மணிக்கெல்லாம் அங்கே வந்திருவேன்."

"டின்னர் சாப்பிடக் கூப்பிட்டிருக்கான்றது வாஸ்தவம்தான். அதுக்காக சரியாக சாப்பிடற நேரத்துக்குப் போய் நிக்கறது நாகரீகமாகப் படுதா?"

"கல்யாணத்துக்கு முன்னயே உங்ககிட்ட நான் சொல்லியிருக்கனே. என்னோட சுதந்திரத்துல தலையிடறத நான் அனுமதிக்க மாட்டேன்னு.."

"சுதந்திரம்னா உன்னோட* பாஷையில் புருஷனோடு ஒத்துழையாமை இயக்கம் நடத்தறதுதானா?"

"என்ன இப்படி பேசறீங்க..? இந்தப் பத்து நாளா நீங்க கூப்பிட்ட இடத்துக்கு நான் வரலையா? இன்னிக்கும் வர மாட்டேன்னு சொல்லலையே.. முக்கியமான ஒருத்தரைப் பார்க்கப் போறதனால தானே இவ்வளவு ப்ராப்ளமும்.."

வினய்குமார் அவளைக் கையமர்த்தினான்.

"உனக்குக் கொடுத்த வாக்கை நான் மறக்கலை. புருஷன்ங்கிற உரிமையில் அப்படிச் சொன்னேன். மத்தபடி உன்



விருப்பம்.."

"இப்படிச சொன்னா எப்படி? ட்ரை டு அன்டர் ஸ்டாண்ட் மீ.."

"புரிஞ்சிகிட்டேன். நேரமாச்சு.. போய் டைரக்டரைப் பாரு.."

"அப்ப சதீஷ் வீட்டுக்கு..?"

"நீ வரலைன்னா என்ன..? நான் மட்டுமாவது அவன் வீட்டுக்குப் போயிட்டு வர்றேன்.."

"எ..என்னைக் கேட்பாங்களே..?"

"எதையாவது சொல்லிக்கறேன்.."

"என்மேல கோபமா?"

"நோ.. நோ.."

"நான் கிளம்பட்டுமா?"

"ம்.."

தயக்கமாய் வாசற்படி இறங்கி பஸ் ஸ்டாப்புக்கு வந்து நின்றவள் எதேச்சையாய் எதிர்ச்சுவரில் தெரிந்த போஸ்டரைப் பார்த்து செமத்தியாய் அதிர்ந்து போனாள்.

போஸ்டரில் -

உடம்பில் பிரேஸியரும், பெட்டிகோட்டும் தவிர வேறு துணியில்லாமல் மல்லாந்து படுத்திருந்தாள் அந்தப் பெண் - அவள்?

வாஹினி.

## 16

அதிர்ச்சியிலிருந்து மீள சூர்யவுக்கு வெகுநேரம் பிடித்தது. வந்து நின்ற பஸ்களில் ஏறக் கூடத் தோன்றாமல்

அப்படியே நின்றிருந்தாள். போஸ்டரில் ஆணியடித்த மாதிரி பார்வை நின்றிருந்தது.

'போஸ்டரில் இருக்கற பெண் வாஹினி தானா?'

உற்றுப் பார்த்தாள் சூர்யா.

வாஹினியேதான்.

போஸ்டரை சற்று அருகில் சென்று பார்த்தபோது காமசுகம் பட டைட்டிலோடு எம்.ரங்கநாதன் வழங்கும் என்ற எழுத்துகள் கண்ணில் பட்டன.

சூர்யாவுக்குள் கோபம் கொப்பளிக்க எதிர் ரோட்டில் இருந்த டெலிபோன் பூத்தை நோக்கி வேகவேகமாய்ப் போனாள். பூத் பராமரிப்பவரிடம் டெலிபோன் டைரக்டரியை வாங்கி ஆர். வரிசையில் தேடி –

ரங்கநாதனின் நெம்பரைக் குறித்துக் கொண்டவள் பின் டைரக்டரியைத் திருப்பிக் கொடுத்து விட்டு டெலிபோன்*எண்களைச் சுழற்றினாள்.

ரிங் போய் ரிசீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ.."

"யாரு..?"

"ப்ரொட்யூசர் ரங்கநாதன் வேணும்.."

"நான்தான் பேசறேன்.. நீ யாரும்மா?"

"நான் சூர்யா.."

"எந்த சூர்யா..?"

"பெண்கள் முன்னேற்ற இயக்கம் நடத்துற சூர்யா.."



"ஓ.. நீயாம்மா.. நான் மறந்துட்டேன். துசா எம்படத்துக்கு ஒரு கதாநாயகி ப்பந்தமாயிருக்கா. அவ பேரும் சூர்யாதான். அதனாலதான் கன்ப்யூஷன்."

"ரங்கநாதன் இது உங்களுக்கே ல்லாருக்கா..?"

"அந்தப் பொண்ணு சூர்யான்னு பேர் வெச்சுகிட்டதுக்கு நான் என்ன பண்ண முடியும்..?"

"நான் அதைக் கேட்கலை.."

"பின்னே..."

"இன்னிக்கு ஒரு புதுப்படம ரிலீசாகி ஊர் ராவும் போஸ்டர் ஒட்டியிருக்கே.."

"படம் ரிலீஸ் பண்ணினா போஸ்டர் ட்டினால்தானே ஜனங்களுக்குத் தெரியும்."

"நான் ஸீரியஸாகப் பேசிட்டிருக்கேன்.."

"ஓ.. நீ சீரியஸாப் பேசிட்டிருக்கியா.. சரி ன்ன விஷயம் சொல்லு..?"

"போஸ்டர்ல நீங்க போட்டிருக்கீங்களே ஸ்டில் அது.."

சொல்லச் சொல்ல சூர்யாவுக்குக் கோபமும் அழுகையும் ஒரே சமயத்தில் பிரவாகம் எடுத்தது.

ரங்கநாதன் சிரித்தார்.

"உங்க பார்வைக்கு அசிங்கமாத் தெரியுதா? இந்தப் படத்தையும் தடை பண்ணணுமா? நல்ல பொண்ணும்மா நீ.. ஏதோ ஒரு படத்துக்கு பேனரை அழிச்சே.. போஸ்டருக்குத் தார் பூசினே. கலெக்டருக்கு

பெட்டிஷன் தந்தே.. கோர்ட்ல கேஸ் வேற போட்டே.. இதையெல்லாம் பார்த்துகிட்டு நான் சும்மா இருக்க முடியுமா? நான் மாசம் ஒரு படம் ரிலீஸ் பண்ணிட்டேதான் இருப்பேன். சும்மா சும்மா நீ கலெக்டர் கிட்டப் போனீன்னா உனக்கு வேற பொழப்பு இல்லையான்னு கலெக்டரே திட்டுவாரு.."

சூர்யா சீறினாள்.

"அந்த போஸ்டர் அசிங்கமா இருக்குங்கறது ஒரு பக்கம் இருக்கட்டும். அதைவிட அதுல என் தங்கச்சியோட மானத்தையே காத்துல பறக் விட்டிருக்கே.. யாரோ நாலு பேர் அவ கற்பை பறிச்சதுல அவ மனசுடைந்து தற்கொலை பண்ணிட்டான்னு நினைச்சேன். இப்பதான் தெரியுது. அவ சாவுக்கு நீதான் காரணம்னு.. எம்மேல கோபமிருந்தா உன் வீரத்தை என்கிட்டே காட்டு. ஒண்ணுமறியாதீ அப்பாவிப் பொண்ணோட வாழ்க்கையை இப்படி அநியாயமா நாசமாக்கிட்டியே பாவி..."

"என்னம்மா ,சொல்றே..?, எனக்கு ஒண்ணும் புரியலையே.. உன் தங்கச்சியோட சாவுக்கு நான் காரணமா?"

"ராஸ்கல். பாசங்கு பண்ணாதே.."

"நீ என்னம்மா சொல்றே..?"

ரங்கநாதன் ரொம்பவும் அதிர்ச்சி அடைந்தவர் போலக் கேட்டார்.

"உன்னோட தங்கச்சியா..? அடக் கடவுளே. அவளுக்கு ஏம்மா இந்த நிலைமை. உன் தங்கச்சியை நீ சரியா



கவனிக்கறதில்லையா. பணத்துக்கு ஆசைப் பட்டு இப்படி ஒரு கேவலமான தொழிலுக்கு வர்றது நல்ல குடும்பத்துப் பொண்ணுக்கு அழகில்லையே.."

"பாவி.. ஒநாய் அழுகை அழுகாதே..."

ரங்கநாதன் கேலியைக் குரலில் தேய்த்துக் கொண்டு தொடர்ந்தார்.

"படத்துல தயாரிப்பு மட்டும்தான் நான். மத்தபடி நடிகைகள் காட்சிகள் எல்லாமே டைரக்டர்தான். அதுவுமில்லாம இஷ்டப் படாத யாரையும் நடிக்க வைக்கறது இல்ல. காண்ட்ராக்ட் ஃபார்மை வேணா உனக்கு ஜெராக்ஸ் எடுத்து அனுப்பச் சொல்றேன்."

"நீ வாஹினியை ஏமாத்தியிருக்கே.."

"போ.. போய் போலீஸ்ல கம்ப்ளைண்ட் கொடு. போஸ்டர்ல உன் தங்கச்சி உடம்புல நீயே தாரைப் பூசு. நானா வேணாங்கறேன். உன் தங்கச்சிக்கும் என் படத்துக்கும் உள்ள சம்பந்தம் சட்ட ரீதியில் க்ளியராக இருக்குது. போ.. கம்ப்ளைண்ட் கொடு. கோர்ட்டுக்குப் போ.."

"நீயெல்லாம் ஒரு மனுஷனா..?"

"மனுஷன்தான்.."

"உன்னை.. உன்னை..."

"உன்னால ஒண்ணும் பண்ண முடியாது. முடிஞ்சா ஏதாச்சும் பண்ணிப் பாருடி. உன் தங்கச்சியே அவுசாரியா இருக்கறப்ப நீ ஊரைத் திருத்த வந்துட்டியா.. சர்தான் போனை வையடி..."

## 17

சூர்யா போலீசில் ரங்கநாதன் மேல் கம்ப்ளைண்ட் எழுதிக் கொடுத்தாள். இரண்டு நாள் விசாரணையை முடித்த போலீசார் அழகாகக் கையை விரித்தார்கள். வாஹினி இஷ்டப்பட்டு படத்தில் நடித்ததாக கான்ட்ராக்ட் சொல்கிறது. படத்தில் விபச்சாரியாக ஒரே ஒரு காட்சியில் காட்டப் பட்டிருக்கிறாள். அதுவும் சென்சார் விதி களுக்குக் கட்டுப்பட்ட காட்சி.

ஆனால் சூர்யா ரங்கநாதனை விடுவதாக இல்லை.

அசோசியேஷன் மூலமாக வழக்குத் தொடர்ந்தாள்.

இத்தனை வறண்ட சம்பவங்களுக்கும் நடுவே ஒரு ஆறுதலான விஷயம் டி.வி. நிலைய டைரக்டரைச் சந்தித்தது.

வித்தியாசமான மனிதராக இருந்தார். ரங்கநாதனாகட்டும், ராமமூர்த்தியாகட்டும், தாங்கள் செய்வது சரிதான் என்று வாதம் பண்ணுவதிலேயே குறியாக இருந்தார்கள். ஆனால் இவர் சூர்யா சொன்னவைகளைக் காது கொடுத்துக் கேட்டார். சூர்யாவுக்கு ஆதரவாகப் பேசினார்.

"இத்தனை நாளாக நாங்க இதையெல் லாம் யோசிக்கலை. இப்பதான் இந்தக் குறைகள் என் கண்ணுக்குப் படுது. நிச்சயமா இதை நாங்க பரிசீலிப்போம். ஒவ்வொரு நிகழ்ச்சியையும் இனிமே இந்த வியூவிலும் பார்க்கறோம். இப்ப வந்திருக்கற



...ிளம்பரங்களை நிறுத்த முயற்சி ...ண்றேன்."

"தாங்க் யூ சார்.."

"அதுமட்டுமில்லை. ஒரு நல்ல ...கொள்கையோட இயக்கம் நடத்திட்டு ...ர்றீங்க. உங்களை இன்டர்வியூ பண்ணி ...வி.யில ஒளிபரப்பக் கூட ஏற்பாடு ...ண்றேன்."

"தாங்க் யூ வெரி மச் சார்.."

...சொன்ன மாதிரியே டி.வி.யில் அவள் ...பட்டியை ஒளிபரப்பினார். பேட்டியை ...ங்கிலத்தில் அமைத்து நேஷனல் ...ரோகிராமில் இடம் பெறும்படி செய்திருந் ...ார் டைரக்டர். சூர்யா துணிச்சலாகச் சொன்ன ...ல கருத்துக்களுக்காக பலரிடமிருந்து ...ாராட்டுக்கள் குவிந்தன.

ஆனால் வீட்டில் வினய்குமார் தேளாய் ...றி அடிக்கடி கொட்டிக் கொண்டிருந்தான். ...கோர்ட்ல கேஸ். டி.வி.யில பேட்டி. ...த்திரியானா தார் பக்கெட்டைத் தூக்கிட்டு ...ர் சுத்தக் கிளம்பிடறே.. இதென்ன ...டும்பமா?"

"கல்யாணத்துக்கு முன்னாடியே இதைப் ...த்தி உங்களை யோசிக்கச் சொன்னேனே. ...னா நீங்கதான் பிடிவாதமா இருந்து ...ல்யாணம் பண்ணிட்டீங்க.."

"அதுக்காக இப்படியா? ஊர்ல ...ருக்கறவன்கிட்டே சண்டை போட்டு ஒரு ...ஜாரி மாதிரி ஆயிட்டே.. எதுக்கும் ஒரு ...மிட் இருக்கு. அரசியல்வாதிகூட

எதிர்ப்பைக் காட்டறதுக்காக ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருந்துட்டுப் போயிருவான். ஆனா உனக்கு தினசரி இதே பொழப்பாப் போயிடுச்சு.."

"அரசியல்வாதி தன்னோட விளம்பரத் துக்காக ஒரு நாள் போராட்டம் நடத்துறான். ஆனா நான் அப்படி இல்லையே..."

"பெரிய தியாகப் பரம்பரை. உன் தங்கச்சி யோக்யதைதான் ஊர் சிரிச்சுப் போச்சே..."

"நீங்களுமா இப்படிப் பேசறீங்க.."

"நான் பேசலை.. ஊரே பேசுது.."

"அந்த ரங்கநாதன்தான் அவளை ஏமாத்தி..."

"உன் தங்கச்சி என்ன சின்னப் பாப்பாவா? கையில் மிட்டாயைக் கொடுத்து ஏமாத்தறதுக்கு.."

சூர்யாவுக்கும் வினய்குமாருக்கும் தினசரி நடக்கும் சின்னச் சின்ன யுத்தங்கள் இவை.

அன்றைக்கு மாலை வினய்குமார் வீட்டில் இல்லாதபோது பீரோவை எதற்காகவோ குடைந்து கொண்டிருந்தபோது துணி களுக்கு கீழே மறைத்து வைத்திருந்த பழுப்பு நிறக் கவர் கண்ணில் பட அதை எடுத்துப் பிரித்தாள் சூர்யா. பிரிக்கப் பிரிக்கவே..

அதிர்ந்தாள்.

அத்தனையும் ஆபாசப் படங்கள்.

ஒரு பெண் உடம்பில் ஒட்டுத் துணி யில்லாமல் விதவிதமாய் உட்கார்ந்து படுத்து நின்று போஸ் கொடுத்திருந்தாள்.



ராத்திரி வினய்குமார் வீட்டுக்கு வந்த போது அவன்மேல் அந்தப் போட்டோக்களை எறிந்தாள்.

"இதெல்லாம் என்ன..?"

அவனுடைய அதிர்ச்சி ஒரு விநாடிதான். மறு விநாடி சிரித்தான்.

"பார்த்துட்டியா? பரவால்ல. என்னிக்கோ ஒரு நாள் தெரிய வேண்டியதுதானே..?"

"இதுதான் உங்க போட்டோகிராபியா..?"

"இதுவும் போட்டோகிராபிதான். சொல்லப் போனால் இதுலதான் எனக்குப் பணம் அதிகமாகக் கிடைக்குது.."

"என்ன சொல்றீங்க..?"

"போட்டோகிராபி எனக்கு ஹாபி மட்டுமில்ல. சைடு பிசினஸும்கூட. இந்த போட்டோ ஒவ்வொண்ணும் என்ன விலைன்னு நினைக்கறே. பெரிய பெரிய கம்பெனிகள் அடுத்த வருஷ காலண்டரில் நான் எடுத்த போட்டோவை போட இந்த வருஷமே என் கையில் அட்வான்ஸ் தர்றாங்க.."

"இதுவும் ஒரு பிசினஸா? உங்களுக்கு வெட்கமாயில்லை.."

"போஸ் தர்ற பொம்பளையே வெட்கப் படாதப்ப நான் எதுக்காக வெட்கப் படணும்..?"

"அவங்க இயலாமையை நீங்க பயன் படுத்திக்கறீங்க.. எனக்கு கணவனா இருந்திட்டு தயவு செஞ்சு இந்த காரியத்தில்

ஈடுபடாதீங்க.."

வினய்குமார் சிரித்தான்.

"இவ்வளவு நிர்த்தாட்சண்யமா பேசறீங்களே.. கல்யாணத்துக்கு முன்னால என்னை மொதல் மொதலா சந்திச்சப் பேசறப்ப நான் எவ்வளவு தூரம் எடுத்துச் சொன்னேன். எனக்கு இலட்சியம்தான் பெரிசுன்னு.. அப்பவெல்லாம் தலையை ஆட்டினீங்களே..."

"உன் போட்டோவைப் பார்த்ததுமே எனக்கு உன்னைப் பிடிச்சுப் போச்சு. தொழில் ரீதியா எத்தனையோ பொண்ணுங்களைப் பார்தத்திருக்கேன். ஆனா எவளுக்குமே உன்னைப் போல் உடம்பு இல்லை. உன்னோட உடம்புக்காகத்தான் நான் சரி சரின்னு தலையாட்டினேன். அவசரமாக் கல்யாணமும் பண்ணிட்டேன். ஆனா நான் ஒண்ணும் மூர்க்கமான புருஷன் இல்லை. தாலி கட்டின கடமைக்காக கடைசி வரைக்கும் உன்னைக் காப்பாத்துவேன். நீ உன்னோட லட்சியத்தைப் பாரு. நான் என்னோட இலட்சியத்தைப் பார்க்கறேன். நான் உன்னோடதை கண்டுக்கலை. நீ என்னைக் கண்டுக்க வேண்டாம்.."

சூர்யா கோப ரத்தம் தலைக்கேற.. அவனைப் பார்த்தாள்.

"உடம்புக்கு ஆசைப்பட்டுக் கல்யாணம் பண்ணிக்கிட்ட நீயெல்லாம் ஒரு மனுஷனா? எனக்கு புருஷன் பொண்டாட்டி வாழ்க்கையைவிட இலட்சியம்தான் பெரிசு. நீ சோறு



போட்டு உயிர் வாழணும்ங்கற நிலைமை எனக்குத் தேவையில்லை. உனக்காக என் இலட்சியத்தை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன். ஹாஸ்டல் வாழ்க்கை எனக்குப் பழகிப் போன ஒண்ணுதான். போறதுக்கு முன்னாடி உன்கிட்டே ஒண்ணு கேட்கறேன். உனக்கு நல்ல மனைவியா நடந்துக்கற கடமையிலேருந்து நான் என்னைக்குமே தவற மாட்டேன். ஆனா நான் எதிர்பார்த்த மாதிரி புருஷனாநடந்துக்க நீ தயாரா..?"

வினய்குமார் மிகவும் அலட்சியமாக...

"சரிதான் போடி..." என்றான்.

## 18

மூன்று மாத மண வாழ்க்கையைவிட பழைய ஹாஸ்டல் வாழ்க்கை சூர்யாவுக்கு ரொம்பவும் அமைதியாக நிம்மதியாக இருந்தது.

சிலர் நிஜமான வருத்தத்தோடு சூர்யாவை விசாரித்தார்கள். உன்னால புருஷனோடு வாழ முடியாது என்கிற பரிகாசத்தை பரிதாபப் போர்வையில் மறைத்துக் கொண்டு விசாரித்தார்கள்.

இதற்கு நடுவே வினய்குமாரிடமிருந்து சட்ட ரீதியாய் டைவோர்ஸ் வாங்கிக் கொண்டு பால் பாயாசம் சாப்பிட்டாள். அம்மாவும் அப்பாவும் திட்டிக் கொண்டு போனதை பொருட்படுத்தாமல் இயக்க வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாள்.

அன்றைக்கு அசோசியேஷன் போவதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தவளைக்

கீழேயிருந்து அவசரமாகக் கூப்பிட்டார்கள்.

கீழே சென்றபோது -

போர்டிகோவில் தேசியக்கொடி பறக்க ஒரு கார் நின்றிருந்தது. யூனிபார்ம் அணிந்த டிரைவர் ஒருவர் ஹாஸ்டல் வார்டனிடம் என்னவோ சொல்லிக் கொண்டிருந்தார்.

மேடம் வார்டன் அவளைப் பார்த்ததும் புன்னகைத்தாள்.

"சூர்யா. உன்னை மெட்ராஸ் வந்திருக்கற மத்திய அமைச்சர் மிஸஸ் பிரேம்குமாரி உடனே வரச்சொல்லி கார் அனுப்பி யிருக்காங்க. ஆறு மணி ப்ளைட்ல டெல்லி கிளம்பறாங்களாம். உடனே போம்மா.."

ஒரு நிமிஷம் மேடம் சொன்னது சூர்யாவுக்குப் புரியவே இல்லை. அவர் சொன்னதையே டிரைவர் சொன்னபோது தான் மனசில் உறைத்தது.

ஏற்கனவே தயாராகியிருந்ததால் அப்படியே காரில் ஏறிக் கொண்டாள்.

இக்னிஷியன் உறுமி கார் புறப்பட்டது.

ஹாஸ்டல் 'காம்பவுண்ட்டைக் கடந்து அந்த குறுகுலான வீதியை நிமிஷத்தில் கடந்து நெரிசலான அண்ணாசலையில் விரைந்து சில நிமிஷங்களுக்கள் அந்த சர்க்யூட் பங்களாவைத் தொட்டது.

வாசலில் அரசாங்கக் கார்களும் செக்யூரிட்டி பந்தோபஸ்த்துகளும் கண்ணில் மோதின.

அவள் காரை விட்டிறங்கியதும் ஒரு



அதிகாரி அவசரமாய் வந்து -

"நீங்கதான் மிஸஸ் சூர்யாவா..?"

"எஸ்.."

"என்கூட வாங்க."

சூர்யா தலையசைத்து அவர் பின்னால் போனாள்.

சூர்யாவுக்கு எல்லாமே ஏதோ கனவில் நடக்கற மாதிரி இருந்தது.

பிரம்பு நாற்காலிகளில் கட்சிப் பிரமுகர்கள் பலர் அமைச்சரைப் பார்ப்பதற்காக தவம் கிடந்தார்கள்.

அதிகாரி அந்த அறைக்குள் அவளைக் கூட்டிப் போனார்.

கதர் புடவை அணிந்திருந்த திருமதி. பிரேம்குமாரி ஒரு கம்பீரமான பெண்ணாக குஷன் நாற்காலியில் தெரிந்தாள். வயது ஐம்பதைத் தாண்டியிருக்கும் என்பதை காதோர நரை சொன்னது. நெற்றியில் குங்குமம்.

சூர்யா "வணக்கம்" சொல்லிக் கை கூப்பினாள்.

புன்னகைத்து வரவேற்ற பிரேம்குமாரி அருகிலிருந்த நாற்காலியில் அவளை உட்காரச் சொன்ன பிறகு நல்ல ஆங்கிலத்தில் பேசினாள்.

"டி.வி.யில் உன்னுடைய பேட்டியைப் பார்த்தேன். அதற்கப்புறமும் விசாரித்து உன்னைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொண்டேன். ரியலி ஐம் வெரி ப்ரவுட் ஆப்

டு..."

சூர்யா பரவசமாய் "தாங்ஸ் மேடம்" என்றாள்.

"உன்னுடைய கொள்கையிலும், இலட்சியங்களிலும் எனக்கும் ஈடுபாடு நிறைய இருக்கிறது. பெண்ணுரிமையை முன்னிட்டு நீ குறிப்பிட்ட அந்த மசோதாவைக் கொண்டு வர நான் முயன்றிருக்கிறேன். உனக்கு ஒரு சந்தோஷ மான செய்தி. இன்றைக்குக் காலையில் நடந்த பாராளுமன்றக் கூட்டத்தில் அந்த மசோதாவை நிறைவேறச் செய்து விட்டேன். இனிமேல் டி.வி.யில் சினிமாவில் பத்திரிகை களில் பெண்கள் ஆபாசப்படுத்தப்பட மாட்டார்கள்.."

"மே...மேடம்.."

"இவ்வளவு நாளாக நிறைவேற்ற முடியாத அந்த மசோதாவை இன்னிக்கு நிறைவேற்ற முடிந்ததென்றால் அதுக்குக் காரணம் நீதான்.."

"நா..நானா...?"

"ஆமா. பேட்டியில் நீ சொன்ன சில கருத்துக்கள் மற்ற எம்.பி.க்களை கன்வின்ஸ் பண்ண எனக்கு உதவியது. இனிமேல் பெண்களை இழிவுபடுத்தும் வகையில் திரைப்படங்கள், விளம்பரங்கள் என்று எதையுமே மக்களிடையே மலியவிட முடியாது. அதை இந்தப் புதிய சட்டம் தடுக்கும். இந்தச் சட்டம் நிறைவேறியதில் உனக்கும் பெரிய பங்கு இருக்கிறது. ஆகவே



அதற்காகவும் உன்னுடைய மற்ற சேவை களை போராட்டங்களைப் பாராட்டியும், ஒரு பாராட்டு விழா ஏற்பாடு செய்யச் சொல்லி யிருக்கிறேன்.. வருகிற பதினொன்றாம் தேதி விழா.."

சூர்யா பிரமித்துப் போய் - அசையக்கூடத் தோன்றாமல் பிரேமகுமாரியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 19

ரங்கநாதனும், விஸ்வமும் உஷ்ணத் தோடு இருந்தார்கள்.

"இது நம்ம வாழ்க்கைப் பிரச்னை சார்.. நமக்குத் தெரிஞ்ச ஒரே தொழில் இதுதான். கலைப்படம் எடுத்தா நானும் நீங்களும் ஃபீல்டுல நிக்க முடியுமா?"

"நீ சொல்றது கரெக்ட்டுதான் தம்பி..."

"இந்தப் புதுச்சட்டம் நம்மை நசுக்கித் தள்ளிட்டுப் போற ரகம் சார்.."

"தம்பி.. எல்லாச் சட்டத்திலும் எங்காவது ஒரு மூலைல சின்ன ஓட்டையாவது இல்லாமப் போகாது.."

"வக்கீல்களை விசாரிச்சிட்டேன் சார். மத்த சட்டத்திலிருக்கற ஓட்டைகளைப் பூசி அடைக்கறதுக்காகத்தான் இந்த புது சட்டமே வந்திருக்கிறதாம்.."

"இந்தப் புதுச் சட்டத்துக்கு உயிர் குடுத்ததே சூர்யாதான்னு அந்தம்மா பேட்டி கொடுத்திருக்காங்களே.."

"ஆமா சார். தங்கச்சிய கெடுத்து சந்தி

சிரிக்க வெச்சுப் பழி வாங்கலாம்னு நினைச்சீங்க.. பதிலுக்கு அவ உங்களைப் பழி வாங்கிட்டா. தங்கச்சியோட நிலைமைக்காக அவளால எப்படி இனி எதுவுமே செய்ய முடியாதோ அதே போல் உங்களாலயும் இனி எதுவும் செய்ய முடியாது.."

நிமிர்ந்தார் ரங்கநாதன்.

"தம்பி.. என்னால அந்த சட்டத்தைத்தான் ஒண்ணும் பண்ண முடியாது.. ஆனா.."

"சூர்யாவை ஏதாவது பண்ணலாம்னு சொல்ல வர்றீங்களா..?"

"பண்ணியே ஆகணும்.."

"நம்ம கருணாகரன்கிட்ட அந்த வேலையைக் கொடுத்துடலாமா?"

"போய் அவனைக் கூட்டிகிட்டு வா.."

கருணாகரன் தலையை மழுங்க மொட்டை அடித்திருந்தான். லுங்கியை தொடைக்கு மேலே ஏற்றிக்கட்டி அரைக்கை வைத்த பனியன் அணிந்திருந்தான். திமிறிய புஜத்தில் கறுப்புக் கயிறு கட்டப்பட்டு தாயத்து ஒன்று தெரிந்தது. சாராயம் குடித்து வயிறு ஒரு பக்கம் சரிந்திருந்தது.

பல் வரிசை தெரிய ரங்கநாதனைப் பார்த்துச் சிரித்தான்.

"நான் முடிக்கறேன்.." என்றான்.

"சொல்றது சுலபம்.."

"முடிக்கறேன்னு சொன்னா முடிச்சாச்சுன்னு அர்த்தம். நீங்க கவலையே பட வேண்டாம்.."



"சாதாரணப் பொதுக்கூட்டமில்லை. மத்திய மந்திரி கலந்துக்கற பாராட்டு விழா. ஏகப்பட்ட பந்தோபஸ்த்து இருக்கும்.."

"என்னங்க நீங்க.. இப்படி சந்தேகப்படறீங்க.. விஸ்வம். நீ ஐயாகிட்ட என் வேலையைப் பத்திச் சொல்லலையா?"

"சார் நீங்க கவலையே பட வேண்டாம். இவன் கிட்டே தொழில் சுத்தம் துல்லியம்.."

ரங்கநாதன் கருணாகரனை ஏறிட்டார். "சரி.. அவளை எப்படி முடிக்கப்போறே..? உன்னோட திட்டம் என்ன..?"

"விழா நடக்கற மைதானத்துக்குத் தொட்ட மாதிரி ஒரு பெரிய ஹோட்டல் இருக்கே.. அந்த ஹோட்டல்ல விழா மேடையைப் பார்க்கற வசதியோட ஒரு ரூம் புக் பண்ணுங்க. ரூம் ஏதோவொரு அநாமதேய பேர்ல புக் ஆகணும்."

"அந்த ரூம்ல இருந்துகிட்டு என்ன செய்யப் போறே..? ஜன்னல் வழியாக துப்பாக்கியால சுடப் போறியா..?"

"அதெல்லா சீப் மெத்தேட். துப்பாக்கியை உபயோகம் பண்ணினா மாட்டிக்குவோம். அதுவுமில்லாம அந்த மைதானத்தில் எப்பவுமே மேடையை கிழக்கே பார்த்துதான் அமைப்பாங்க. ஹோட்டல்ல இருந்து பார்த்தா மேடையோட பின்பக்கம்தான் தெரியும்.."

"அப்படீன்னா நீ எப்படி அவளைத் தீர்க்கப் போறே..?"

"ஒரு அஞ்சு இலட்சத்தை எடுத்து

வையுங்க.. சொல்றேன்..."

## 20

தேதி பதினாறு.

விழா மைதானம் நிரம்பி வழிந்தது. திடீர் வியாபாரத்துக்கு வாய்ப்புக் கிடைத்த சந்தோஷத்துடன் தள்ளு வண்டிகள் சுற்றிலும் போலீஸ் விழா மேடை கலப்பாய் கண்ணில் பட -

சூர்யா பட்டுப்புடவையில் ஜொலித்தாள். பேச வந்திருந்த கட்சி ஆசாமிகள்.. மேலோட்டமாய் சூர்யாவைப் பாராட்டி விட்டு கட்சிப் பிரச்னைகளை அரைமணி நேரம் அலசிவிட்டு மீண்டும் சூர்யாவில் வந்து முடித்துவிட்டு உட்கார்ந்தார்கள்.

பிரேம்குமாரி பேசுவதற்காக எழுந்தார்.

கூட்டத்தில் கைத்தட்டல் அலை மோதியது. தெளிவான ஆங்கிலத்தில் பிரேம்குமாரி பேச ஆரம்பித்தாள்.

"நான் எத்தனையோ பராராட்டு விழா கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன். அந்த பாராட்டுக் கூட்டங்கள் எல்லாம் செயற்கையாக இருக்கும். சுய விளம்பரத்திற்காக ஏற்பாடு செய்யப் பட்ட கூட்டங்கள் அவை. ஆனால் இன்றைக்கு நடைபெறும் இந்த பாராட்டுக் கூட்டத்தில் உள்ளமெல்லாம் நிறைந்த மகிழ்ச்சியோடு கலந்து கொள்கிறேன். காரணம் பெண் குலம் ஒரு பெருமை மிக்க வெற்றியை அடைந்திருக்கிறது. கொச்சைப் படுத்தப்பட்ட பெண்களின் மானம் இன்றைக்குக் காப்பாற்றப்



பட்டிருக்கிறது. பெண்களின் உடல்களைக் காட்டி வியாபாரத்தை நடத்தியவர்கள் இன்றைக்குப் பலமிழந்து போய் நிற்கிறார்கள். ஒரு அரசால் கொண்டு வர முடியாத மாற்றத்தை சூர்யா கொண்டு வந்திருக்கிறார். பெண் குலத்தின் சார்பாக குரல் கொடுத்த சூர்யாவின் குரல் இன்றைக்கு இந்தியா பூராவும் கூட்டத்தின் உருவில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. ஆபாசத்தை ஒழிக்க வேண்டும் என்கிற இந்த தாகம் சூர்யாவுக்கு ஏற்பட்ட மாதிரி மற்ற பெண்களுக்கும் ஏற்பட வேண்டும். பெண்ணினம் எந்த சந்தர்ப்பத்திலும் கொச்சைப் படுத்தப்படக் கூடாது. பெண்கள் மதிக்கப்படுகிற நாடுதான் உலக அரங்கில் பெருமையும் பெற்று வருகிறது. சூர்யாவின் புயல்வேக நடவடிக்கைகள் என்னுள் பிரமிப்பை ஏற்படுத்தியுள்ளன. தன் இலட்சியத்துக்காக சகோதரியின் மரணத்தைச் சந்தித்திருக்கிறார். கணவரைப் பகைத்துக் கொண்டு பிரிந்து வாழ்கிறார். இந்த மனோதிடம்.. அசாத்திய தைரியம் தான்.."

அமைச்சர் பிரேம்குமாரி பேசிக் கொண்டே போனார்.

## 21

கருணாகரனுக்கு அந்த அறை மிக வசதியாக இருந்தது. அறையின் ஜன்னல் வழியாகப் பார்த்தால் விழா மேடையின் பின்புறமும் தென்னை ஓலையால் வேயப் பட்ட மேல் கூரையும் பக்கத்தில் தெரிந்தன.

காரியங்களை மளமளவென்று நடத்தி விட்டு இடத்தைக் காலி பண்ணி விட வேண்டும் என்பதில் குறியாக இருந்தான் கருணாகரன்.

மேஜைமேலிருந்த அந்த வில்லையும் அம்பையும் கையிலெடுத்தான். ஸ்பிரிங் அமைப்புகளின் உதவியால் வெகுதூரம் செல்லக் கூடிய ஸ்போர்ட்ஸில் பயன் படுத்தும் வில் அம்பு அது.

ட்வைன் நூலின் ஒரு முனையை அந்த அம்புடன் சேர்த்துக் கட்டினான்.

ஜன்னலருகே வந்து நின்ற விழா மேடையின் பின்புற கூரைக்குக் குறி வைத்தான்.

விஷ்க்க்க்..

விநாடிக்குள் அந்த அம்பு ட்வைன் நூலோடு விழா மேடையின் கூரையில் சக்கென்று குத்திட்டு நின்றது.

ட்வைன் நூலின் மறுமுனையை ஜன்னலோடு சேர்த்து இறுக்கமாய்க் கட்டினான்.

ஒரு சின்ன ரோலரில் இணைத்து வைக்கப் பட்டிருந்த அந்த வெடிகுண்டின் திரியை அவசரமாய் உயிரூட்டினான்.

ரோலரை ட்வைன் நூலில் சரியாகப் பொருத்தி நழுவ விட்டான். 'திரியிலிருக்கும் நெருப்பு வெடிக்கும் பகுதியைத் தொடுவதற்கும் ட்வைன் நூல் வழியாக வெடிகுண்டு விழா கூரையைச் சென்றவடைவதற்கும் சரியாக இருக்கும்.



மேடை தீப்பிழம்பாய் மாற மேடையில் இருக்கற எல்லோருமே நிமிஷ நேரத்தில் கருகிச் சாய்வார்கள்.'

'சர்ர்ர்ர்ர்.....'

ரோலர் ட்வைன் நூலில் பயணிக்கத் துவங்க -

கருணாகரன் ஜன்னலைச் சாத்திவிட்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

படிக்கட்டில் சரசரவென இறங்கியவன் படிகள் முடிந்து திரும்பியதும் -

அதிர்ந்தான்.

ஒரு சின்ன போலீஸ் கும்பல் நின்றிருந்தது. ஓட முயன்ற கருணாகரன் இடுப்பில் உதை பட்டுக் கீழே விழுந்தான்.

## 22

"**கொ**லை முயற்சியை முறியடித்தது எப்படி?"

மத்திய மந்திரி திருமதி பிரேமகுமாரி, சமூக சேவகி சூர்யா உட்பட பலர் இருந்த விழா மேடையை வெடி வைத்துத் தகர்க்க சிலர் முயன்றது தெரிந்ததே. நடக்க இருந்த துர் சம்பவத்தைத் திறமையாக முறியடித்த இன்ஸ்பெக்டர் ஜோதிராஜ் சொல்கிறார்.

"நாட்டில் விதிமுறைகளும், கொலைகளும் அதிகமாகிவிட்ட இந்த நிலையில் பொதுவாக அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் நிறைய பாதுகாப்பு நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன

அதிலும் மத்திய அமைச்சர் கலந்து கொள்கிறார் என்றால் கேட்கவே வேண்டாம்.

எல்லா ஏற்பாடுகளையும் செய்த பின்னும் விழா நடக்க இருந்த மைதானத்தைச் சுற்றிச் சுற்றி வந்தேன். மேடைக்குப் பின்புறமிருந்த ஹோட்டல் மனசை நெருடியது.

ஹோட்டலுக்குச் சென்று பார்வை யிட்டேன். விழா நடக்கிற அன்று அறை புக் செய்பவர்கள் எல்லோருடைய விலாசங் களையும் வாங்கி ஒரு கான்ஸ்டபிள் படை அமைத்து விசாரிக்கச் சொன்னேன்.

அறை எண் 47க்கான அட்ரஸ் பொய் என்று தெரிய வந்தது. அந்த அறை மேடைக்கு ஓரளவு அருகில் அமைந்துள்ளது மூளைக்கு சிவப்பு சிக்னலைத் தந்தது.

சம்பந்தப்பட்ட ஆசாமி விழா தினத்துக்கு முன் தினமே அறையை புக் செய்திருக் கிறான். ஆசாமி வருவதற்கு முன்னதாகவே அறையில் சில வீடியோ ஏற்பாடுகள் ஹோட்டல் மேனேஜரின் ஒத்துழைப்புடன் செய்தேன்.

ஆசாமி செய்கிற எந்தக் காரியமும் பக்கத்து அறையில் தெரியும்படி ஏற்பாடு. ஆள் அறைக்குள் நுழைந்ததில் இருந்தே விழா மேடையை நோட்டமிட்டபடியே இருந்தான். விழா தொடங்கியதும் அவன் கையோடு கொண்டு வந்திருந்த சிறிய ரெக்ஸின் பையிலிருந்த அந்தக் கருவிகளை எடுத்து வைத்தான்.

ரோலருடன் கூடிய டைனமைட், ட்வைன் நூல், பிளாஸ்டிக்கால் செய்த வில் அம்பு.. எனக்கு ஓரளவு அவனுடைய திட்டம் என்ன என்பது புரிந்தது. உடனடியாக இரண்டு மூன்று கான்ஸ்டபிள்களை சில இடங்களில் நிறுத்தி வைத்தேன்.

சன்ஷேட், ஹோட்டல் காம்பவுண்ட் சுவர் இப்படி உத்தேசமாக ட்வைன் நூல் கடந்து செல்லக்கூடிய இடங்கள் பற்றி கான்ஸ்டபிள் களுக்குத் தெளிவான இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்திருந்ததால் சன்ஷேடு அருகே பதுங்கியிருந்த கான்ஸ்டபிள் கந்தசாமி பாதியிலேயே வெடிகுண்டைத் தடுத்து செயலிழக்கச் செய்து விட்டார்.

தப்பிக்க முயன்ற ஆசாமியை வளைத்துப் பிடித்து விட்டோம். நடந்த சதி முயற்சிகள் எதுவும் தெரியாமல் விழா சிறப்பாய் நடந்து கொண்டிருக்கிறது.

இந்தக் கொலை முயற்சியில் ஒரு சினிமா தயாரிப்பாளரும், அவருடைய உதவியாள ரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பெண்கள் முன்னேற்ற இயக்கத்தின் தலைவி சூர்யாவுக்கு வைத்த குறி அது என்பது விசாரணையில் தெரிய வந்தது."

பத்திரிகை நியூஸைப் படித்து முடித்த சூர்யா நிமிர்ந்து யாதவ்வைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"உங்க ரிப்போர்ட்டா?"

"ஆமா.."

"இது பரவாயில்லை. கவர் ஸ்டோரியில் என்னை ரொம்பத்தான் புகழ்ந்து எழுதி

யிருக்கீங்க.."

"உங்களை முழுசாப் புகழ இன்னும் பத்து கவர் ஸ்டோரி போடணும்.."

"இந்த இயக்கத்துக்கு அஸ்திவாரம் போட்டதே நீங்கதானே.. நீங்க பேட்டி எடுத்த பின்னால்தான் என் செயல்களில் வேகம் பிறந்தது. ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள்னு பொதுவாகச் சொல்லுவாங்க.. அதே மாதிரி சூர்யாங்கற இந்தப் பெண்ணோட வெற்றிக்குப் பின்னால் ஒரு ஆண் இருக்கார். அது யாதவ்.."

"தாங்க் யூ.. இந்த சந்தோஷமான சந்தர்ப்பத்தில் உங்ககிட்ட ஒரு சின்ன அப்ளிகேஷன்.."

"என்ன..?"

"ரொம்ப நாளா நான் கேட்க நினைச்சது கேக்காம விட்டதுக்கு ரெண்டு முக்கியமான காரணங்கள் உங்க லட்சியம் ஒரு எல்லையைத் தொடணுங்கற ஆசை.. ரெண்டாவது நீங்க கேட்டா தப்பா நினைச்சுக்குவீங்களோன்னு ஒரு பயம். உங்க இலட்சியம் எல்லையைத் தொட்டு டுச்சி.. நீங்க தப்பா நினைக்க மாட்டீங்கங்கற நம்பிக்கையும் எனக்கு இருக்கு. ஸோ.. ஐ வான்ட் டூ.. மேரி.."

அவள் புருவத்தைச் சுருக்கிக் கொண்டு அவனைப் பார்த்தாள். பின் சொன்னாள். "நான் ஒரு டைவோர்ஸ்ட் உமன்.."

"தெரியும். உங்களுக்கு நடந்தது



கல்யாணமில்லை.. மோசடி. நீங்க சம்மதம்னு ஒரு வார்த்தை சொல்லுங்க. நிஜமான கல்யாணம் நிஜமான வாழ்க்கை இதோ இங்கே பக்கத்திலிருக்கு..."

"ஸாரி.. ஐயாம் அன்பார் மேரிட் லைப். என்னோட இயக்கம் உயிரோடு இருக்கணும்னா.. என்னோட குடும்ப ஆசைகளுக்கு உயிர் இருக்கக் கூடாது.. உங்களுக்கு மட்டுமில்ல. இனிமே நான் எந்த ஆணுக்குமே நல்ல மனைவியா இருக்க முடியாது.."

"சூர்யா.. நீங்க என்னையும் அந்த லிஸ்ட்ல சேர்க்கணுமா?"

சூர்யா புன்னகைத்தாள்.

"ஜென்ட்ஸ் ஆர் ஜென்ட்ஸ்தான்.. நீங்க இப்போ எனக்கு நண்பர். வெல்விஷர் இந்த உறவுகள் போதும் எனக்கு. இதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு.."

"சூர்யா.."

"ஸாரி.. அந்த உன்னதமான உறவுகளைக் கெடுத்துக்க நான் விரும்பலை.."

யாதவ் திகைத்து நிற்க -

சூர்யா சலனமில்லாமல் சொன்னாள்.

"வாங்க.. ஹாஸ்டல் கான்டீனுக்குப் போகலாம். இந்நேரத்துக்கு தயிர் வடை அமோகமாய் இருக்கும்.."

யாதவ் ஒரு நண்பனாக அவளோடு நடந்தான்.

(முடிந்தது)